உடையவர் தீயனூர்
அருள்மிகு அமிர்தாம்பிகை உடனுறை
ஜமதக்னீஸ்வரர் திருக்கோயில் தல வரலாறு



டாக்டர் இல.தியாகராஜன்



ஜமதக்னீஸ்வரர்



அமிர்தாம்பிகை



விநாயகர்



சண்டிகேஸ்வரர்

உடையவர் தீயனூர்

அருள்மிகு அமிர்தாம்பிகை உடனுறை ஜமதக்னீஸ்வரர் திருக்கோயில் தலவரலாறு

டாக்டர்.இல.தியாகராஜன்

எம்.ஏ., எம்ஃபில்., டி.இ.ஏ., பி.எட்., பி.எச்.டி.,

பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், முதுகலை வரலாறு மற்றும் முழுநேர முனைவர்ப் பட்ட ஆய்வுத்துறை,

அரசுக் கலைக் கல்லூரி, அரியலூர் – 621 713.

வெளியீடு

அருள்மிகு ஜமதக்னீஸ்வரர்

திருக்கோயில் கும்பாபிஷேக – பாலாலய வெளியீடு

உடையவர் தீயனூர்,

உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்,

04.03.2010

நூல் பற்றி...

நூற்பெயர் : உடையவர்தீயனூர் அருள்மிகு அமிர்தாம்பிகை
உடனுறை ஜமதக்னீஸ்வரர் திருக்கோயில்
தலவரலாறு

பொருள் : கல்வெட்டு ஆராய்ச்சி நூல்

ஆசிரியர் : டாக்டர்.இல.தியாகராஜன், எம்.ஏ., எம்.பில்., டி.இ.ஏ., பி.எட்., பிஎச்.டி.,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
முதுகலை வரலாறு மற்றும் முழுநேர
முனைவர்ப்பட்ட ஆய்வுத்துறை,
அரசு கலைக் கல்லூரி, அரியலூர் – 621 713.

வெளியீடு : ஜமதக்னீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிக்குழு,
உடையவர்தீயனூர்.

முதற்பதிப்பு : மார்ச் 2009

படிகள் : 500

அளவு : 1 / 8

தாள் : 18.6 மேப்லித்தோ

பக்கம் : 96

விலை : ரூ.50/–

அமைப்பும்,அச்சும்: மெர்க்குரி பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்,
பெரம்பலூர் - 621 212.
தொலைபேசி : 04328-276458

பிரதிகளுக்கு : காமரசவல்லி ப்திப்பகம்,
2/363, மேரீஸ் இல்லம்,
இராஜாஜிநகர், அரியலூர் –621 713.

பொருளடக்கம்

நன்றியுரை

கங்கைகொண்டசோழபுரத்தை அமைத்த சோழப் பெருமன்னர் முதலாம் இராஜேந்திரனின் மூத்த மகனான முதலாம் இராஜாதிராஜனின் (1018–1053) ஆட்சிக்காலம் முதல் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பெறும் வரலாற்றுச்சிறப்புடைய பழமையான ஊர் உடையவர் தீயனூராகும். இங்குள்ள ஜமதக்னீஸ்வரர் கோயில் இரண்டாம் இராஜராஜன் காலத்தில் கற்றளியாக கி.பி.1166–இல் கட்டப்பெற்ற பழமையுடையது. இன்றைக்கு 934 ஆண்டுகள் தொன்மை உடையது இக்கோயிலாகும்.

கல்வெட்டுகளில் தீயனூர் என்றும் மனுகுலகேசரி நல்லூர் என்றும் இவ்வூர் குறிப்பிடப்படுகிறது. திருவக்கீஸ்வரர், திருவக்னீஸ்வரர் என்று இக்கோயிலின் பெயர் 'கல்வெட்டுகளில் குறிப்பிடப் பெற்றுள்ளது. அக்னீஸ்வரர் என்னும் பெயருடன்' ஜமதக்னி முனிவரின் தொடர்பால் இக்கோயிலுக்கு ஜமதக்னீஸ்வரர் என்னும் பெயர் உண்டாயிற்று. இச்சிவன் கோயிலும் இங்குள்ள அம்மனும் தற்பொழுது அருள்மிகு அமிர்தாம்பிகை உடனுறை ஜமதக்னீஸ்வரர் என அறநிலையத் துறையாலும் மக்களாலும் அழைக்கப்பெற்று வருகிறது.

இத்திருக்கோயிலின் தல வரலாற்றை எழுதுவதற்கு என்னை ஒரு கருவியாக ஆக்கி இறைபணியில் என்னை ஈடுபட வைத்த எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளின் கருணையை எண்ணி வணங்குகின்றேன். 17.12.1982 அன்று இக்கோயிலில் களஆய்வு செய்து இங்குள்ள கல்வெட்டுகளைப் படித்தேன். அப்போது என்னுடன் இருந்து ஆய்வில் உதவிய அரியலூர் சப்கலெக்டர் **திரு.மு.கலைவாணன்,** இ.ஆ.ப., அவர்களுக்கும், வரலாற்றுத் துறைப் **பேராசிரியர் சே.பாண்டியன்,** எம்.ஏ., பி.எட்., எம்.பில்., அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகும்.

இக்கோயில் கல்வெட்டுகள் பற்றிய தகவலை தினமலரில் செய்திக் கட்டுரையாக வெளியிட்டு மக்களிடையே வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்திய நிருபர் விக்கிரமங்கலம் தெய்வத்திரு.சிவசைலம்பிள்ளை அவர்களை இந்நேரத்தில் நினைத்து வணங்குகிறேன். இக்கோயிலின் கல்வெட்டுகளைப் படியெடுக்கவந்து உதவிய மத்திய தொல்லியல் துறை கல்வெட்டுப் பிரிவு அலுவலர்கள் கே.கருப்பையா, சுகுமார் மற்றும் வரலாற்றுப் பேராசிரியர்கள் பெ.இரவிச்சந்திரன், வே.செவ்வேள், ச.புவனேஸ்வரி, அ.ரேசாபி, இரா.கலையரசன், ஆகியோருக்கும் அப்பொழுது உடனிருந்து ஆர்வத்துடன் பல உதவிகளைச் செய்த இக்கோயில் சந்திரமௌலி குருக்கள், பாபுகுருக்கள், அவருடைய துணைவியார் திருமதி.கௌரி அம்மாள் ஆகியோருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி உரியதாகும்.

இக்கோயில் வரலாற்றை நூலாக வெளியிட ஏற்பாடு செய்த ஊர்ப் பொதுமக்களுக்கும், ஸ்ரீஜமதக்னீஸ்வரர் ஆலய இறைப்பணிக்குழு ஆன்மிக அன்பர்களுக்கும் இவ்வூர்ப்பிரமுகர் அருட்செல்வர் ப.முருகானந்தம்,பி.இ.,எம்.பி.ஏ., அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகும்.

4.3.2010 அன்று நடைபெற்ற இக்கோயிலின் பாலாலய சிறப்பு நிகழ்ச்சிகளை பத்திரிக்கைகளில் செய்தியாக வெளியிட்டு மக்களிடையே ஆன்மிக திருப்பணிக்கான செயல்களில் ஈடுபட ஆர்வத்தை ஏற்படுத்திய அரியலூர் தினகரன், சன் டிவி நிருபர் திரு. செந்தில், தினமலர் நிருபர் திரு.சி.கணேசன், தினத்தந்தி நிருபர், திரு. தளபதி, தினமணி நிருபர் திரு. ஆனந்தன், காலைக்கதிர் நிருபர், திரு ஜோதிராமலிங்கம் ஆகியோருக்கு நன்றி.

அறநிலையத்துறை ஆணையர், இணை ஆணையர், செயல் அலுவலர் திரு.வி.மணி, தக்கார்–ஆய்வாளர் திரு.ஜி.சண்முகசுந்தரம், கோயில்கணக்கர் திரு.அ.வேலாயுதம், உபயதாரர்கள் ஆகியோர் இக்கோயிலின் ஆய்வுக்கு அனுமதி வழங்கி உதவியதுடன் திருப்பணிக்கும் பெரிதும் உதவி இந்நூல் வெளிவரவும் பெருமுயற்சி மேற்கொண்டமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இக்கோயில் வரலாற்றைச் சிறப்பாகக் கணினி மூலம் தட்டச்சு செய்து உதவிய செல்வி.அ.ரேசாபிக்கு எனது உளம்கனிந்த பாராட்டுக்கள். மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை அழகுற அச்சிட்டு வழங்கிய பெரம்பலூர் மெர்க்குரி பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.கா.பாலமுருகன் அவர்களுக்கும் இக்கோயில் புகைப்படங்களை சிறந்த முறையில் ஸ்கேன் செய்து வழங்கிய அரியலூர் சக்தி டிஜிட்டல் உரிமையாளர் திரு.இளங்கோவன் அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகும். பாலாலய விழாவை சிறப்புடன் நடத்தி வைத்த கிராமவாசிகள், நாட்டாண்மைகள், செயல் அலுவலர் திரு.வி.மணி, தக்கார் ஆய்வாளர் திரு.ஜி.சண்முகசுந்தரம், தஞ்சை மாவட்ட மெலட்டூர், சிவாகம செல்வர் சிவஸ்ரீ ந.க.அய்யப்பசிவாச்சாரியார் ஆகியோர்களுக்கும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த வேலூர் மாவட்டம் திருவலம் சர்வமங்களாபீடம் ஸ்ரீ ஸாந்தாஸ்வாமிகள், கோமல் ஓம் நமச்சிவாயா டிரஸ்ட், திருப்பணிச் செம்மல் கோமல் சேகர் ஐயா, கும்பகோணம் ஜோதிமலை இறைபணிக் கூடம் நிறுவனர் தவத்திரு, திருவடிக்குடில் ஸ்வாமிகள், கொல்லிமலை சித்தர் பகவான் சுவாமிகள் ஆகியோர்களுக்கு விழாக்குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இல. தியாகராஜன்

உ

திருச்சிற்றம்பலம்

சிவாயநம ஓம் நமச்சிவாய

தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !
நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

மாணிக்கவாசகர்

அல்லல்போம் வல்வினைபோம்
அன்னைவயிற்றில் பிறந்த தொல்லைபோம்
போகாத் துயரம் போம் நல்ல குண மதிகை
மா அருணை கோபுரத்துள் வீற்றிருக்கும்
செல்வக் கணபதியை கைதொழுதக் கால்

மூஷிகவாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித சூத்ர
வாமனரூப மகேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்தே

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலரான் நோக்குண்டாம்
மேனிநுடங்காத பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

யாரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இதன் அகலமும் நீளமும்
பேரறியாப் பெருஞ்சுடர் ஒன்றின்
வேரறியாதன விளம்புகின்றேனே!

— திருமூலர்

மாசில் வீணையுமாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தையிணையடி நீழலே

— அப்பர்

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவேநா நவின்றேத்துமே
நமச்சிவாயவேநன்னெறி காட்டுமே

— அப்பர்

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடையவெடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதேயிந்தாமா நிலத்தே.

—அப்பர்

வாழ்கவந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர் தீர்கவே

—சம்பந்தர்

திருக்கோயிலில்லாத திருவிலூருந்

திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடுபலதளிகளில்லாவூரும்
விருப்பொடுவெண்சங்கமூதாவூரும்
விதானமும் வெண் கொடியுமில்லாவூரும்
அருப்போடு மலர் பறித் திட்டுண்ணாவூரு
மவையெல்லாமூரல்லவடவிகாடே

—அப்பர்

பெருக்காறுசடைக்கணிந்த பெருமான்சேரும்
பெருங்கோயிலெழுபதினோடெட்டுமற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ்ஞாழற்கோயில்
கருப்பறியற்பொருப்பனையகொகுடிக்கோயில்
இருக்கோதிமறைய்வர்கள் வழிபட்டேத்து
மிளங்கோயின்மணிக்கோயிலர்லக்கோயில்
திருக்கோயில்சிவனுறையுங்கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத்தீவினைகடீருமன்றே !

—அப்பர்

வான்மழை வழாதுபெய்க மணிவளம் சுரக்க
மன்னன் கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க நான்மறை
அறங்கள் ஓங்கநற்றவ வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

—சேக்கிழார்

சொற்றுணைவேதியன் சோதியானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கைதொழ
கற்றுணைப்பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்

நற்றுணை யாவது நமச்சிவாயவே.

—அப்பர்

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

– அபிராமிஅந்தாதி

முன்னுரை

ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'கோபுர தரிசனம் கோடிப்புண்ணியம்', என்பது ஆன்றோர்களின் வாக்கு. தமிழகம் தெய்வீகத் திருக்கோயில்கள் நிறைந்த புண்ணிய பூமியாகும். அக்காலத்தில் கோயில்கள் சமுதாய, சமயப்பண்பாட்டு மையங்களாக இருந்தன. மக்களுக்கு சமயநெறிகளின் மூலம் கட்டுப்பாடுடன் வாழ்கின்ற முறையை அமைத்துக் கொடுத்தவை கோயில்களே ஆகும். இதனால்தான் ஔவையார் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றார். "கோயில் இல்லா ஊர் அடவி காடு (சுடுகாடு)" என்பது அப்பர் பெருமானின் திருவாக்கு.

இவை இறை நம்பிக்கையிலும், தெய்வ வழிபாட்டிலும் நம் முன்னோர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றன. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் சிவப்பரம்பொருள் மானிட உயிர்கள் யாவும் உய்வதற்காகத் தன் அருவ நிலையிலிருந்து இறங்கி இம்மண்ணுலகில் உருவத்திருமேனியராய் ஸ்தூல வடிவில் எழுந்தருளி அருள் வழங்கும் புனித இடங்களே திருக்கோயில்களாகும்.

பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்தபோதும் அதன் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போல இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே உயிர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணாத பால் முகப்பால் விம்மி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே" என்று ஆன்றோர் கூறியுள்ளனர்.

இத்தகைய தெய்வீகத் திருக்கோயில்கள் நிறைந்த நாடு சோழநாடு ஆகும். பல்லவரும், சோழரும் சைவ, வைணவ சமயங்களைப் போற்றி வளர்த்து இந்நாட்டைக் கலை வளமும், ஆன்மீக வளமும் மிக்கப் புண்ணிய பூமியாக மாற்றியுள்ளனர்.

தமிழகக் கோயில்கள் இறை வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இல்லாமல் தமிழகத்தின் வரலாறு, அரசியல், கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் எழில் மிக்கப் பெட்டகங்களாகவும் விளங்குகின்றன. சமய உணர்வும், அறநெறிப் பண்புகளும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கி அதன் நடுநாயகமாக நின்று இயக்கி வருபவை நமது திருக்கோயில்கள் எனில் அது மிகையாகாது. அந்தந்த வட்டாரத்து வரலாற்றுச் சிறப்புக்கள், சமய வழிபாட்டு முறைகள், சமூகப் பொருளாதார வாழ்க்கை முறை பற்றிய செய்திகளைக் கல்வெட்டு வடிவில் பதிவு செய்து தன்னகத்தே வைத்துக் கொண்டு ஒரு திறந்தவெளி ஆவணக் காப்பகமாக நம் நாட்டுக் கோயில்கள் விளங்குன்றன. ஊர்ச்சபைக் கூட்டம் நடக்கும் பொதுமன்றமாகவும், வழக்குகள் தீர்க்கப்படும் நீதிமன்றங்களாகவும், சமய நூலகமாகவும், கருவூலமாகவும், தானிய சேமிப்புக் கிடங்காகவும், மருத்துவச் சாலைகளாகவும், இசை, சிற்பம், ஓவியம், நாட்டியம், என்னும் நுண் கலைகளைப் போற்றி வளர்க்கும் கலா சாலைகளாகவும், கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் அரங்குகளாகவும், திருவிழாக்கள் மூலம் அனைத்துப் பிரிவு மக்களையும் ஒன்றிணைக்கும் சமூக மையங்களாகவும் கோயில்கள் விளங்கின. பிராமணர், வேளாளர், வணிகர் பலவகைத் தொழில்களைச் செய்து பொருள் உற்பத்தியில் ஈடுபடும் கைவினைஞர்கள், சமூகப் பணியாளர்கள் என்னும் பல அடுக்குகள் கொண்ட பண்டையச் சமூகங்கள் கோயில்களை நடுவமாகக் கொண்டே இயங்கின. அரசர்களின் வெற்றிகள், ஆட்சி

நெறிமுறைகள் பற்றிய செய்திகளை அந்தந்தப் பகுதி மக்களுக்குப் பரப்புகின்ற முகவர்களாகவும் கோயில்கள் இயங்கின. அரசரையும், மக்களையும் இணைக்கும் பணிகளையும் கோயில்களே செய்தன.

இவ்வாறு பண்டைய சமய, பண்பாட்டு, வரலாற்று மையங்களாக இருந்த பல கோயில்களில் உடையவர்தீயனூர் ஜமதக்னீஸ்வரர் திருக்கோயிலும் ஒன்றாகும். இக்கோயிலின் வரலாறு மற்றும் தலச்சிறப்புகளை முழுமையாக வெளிக்கொணர வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

ஆதாரங்கள்

இக்கோயிலின் வரலாற்றை அறிவதற்கு இங்குள்ள கல்வெட்டுக்களும் இக்கோயிலின் சிறப்புகளைப் பற்றிக் கூறப்படும் தலபுராணச் செய்திகளும் சிற்பங்களும் முக்கியச் சான்றுகளாக உள்ளன. இப்பகுதியில் உள்ள ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்களும் தீயனூரைப் பற்றி அறிய உதவுகின்றன. தங்கள் பகுதியின் 1000 ஆண்டுக்கால சிறப்பையும், கோயிலின் பெருமைகளையும் அறிந்து மகிழ இவ்வூர் மக்களுக்கு இந்நூல் உதவும் என்பதில் ஐயமில்லை.

இயல் – 1

உடையவர்தீயனூர் அமைவிடம், பெயர்க்காரணம், தலச்சிறப்பு

அமைவிடம்

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் தா.பழூர் யூனியனில் வரலாற்றுச் சிறப்பும் இயற்கை வளமும் நிறைந்த உடையவர்தீயனூர் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. அரியலூரிலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இவ்வூரின் தெற்கில் மருதையாறு என்னும் வரலாற்றுப் பழமைமிக்க ஆறு ஓடுகிறது. இந்த் ஆறு சோழர் காலத்தில் இராஜேந்திரசிங்கப் பேராறு, இராஜேந்திரசோழப்பேராறு என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டது என்று கீழப்பழுவூர், பெரியத் திருக்கோணம் ஆகிய ஊர்களில் உள்ள சோழர்காலக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன[1]. இவ்வூருக்கு நீர் வளத்தையும், இயற்கை எழில் வளத்தையும் இந்த ஆறு வழங்குகிறது. அரியலூரிலிருந்து வி.கைகாட்டி (விளாங்குடி கைகாட்டி) வழியாக ஸ்ரீபுராந்தான் வரைச் செல்லும் சாலையில் நாகமங்கலம், அம்பலவர்கட்டளையை அடுத்து இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூருக்கு அடுத்தபடியாக விக்கிரமங்கலம், கீழநத்தம், குணமங்கலம், முட்டுவாஞ்சேரி, சாத்தம்பாடி, கோவிந்தபுத்தூர், ஸ்ரீபுரந்தான் ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்கள் அமைந்துள்ளன. இவ்வூரின் தெற்கே ஓடும் மருதையாற்றைக் கடந்து சென்றால் ஆதனூர், சுண்டக்குடி,

ஒட்டக்கோயில் ஆகிய ஊர்களை அடையலாம். இவ்வூருக்கு வடக்கில் செங்குழி, பட்டாக்காட்டக்குடிசல் போன்ற சிற்றூர்கள் உள்ளன.

வளம் நிறைந்த நஞ்சை புஞ்சை நிலங்கள் நிறைந்துள்ள இவ்வூரில் நெல், கரும்பு, வாழை, தென்னை, மா, கடலை, எள், கம்பு, சோளம், அவரை, துவரை உள்ளிட்ட பல்வேறு நஞ்சை, புஞ்சை தானியங்கள் விளைகின்றன.

இவ்வூரில் வன்னிய இனப் பெருமக்கள் மட்டுமே வாழ்கின்றனர். பெருமாள் தீயனூரில் உடையார், மூப்பனார், ஆதிதிராவிடர், நாவிதர், வண்ணார், குயவர் உள்ளிட்ட பல்வேறு இன மக்களும் வாழ்கின்றனர்.

பெயர்க்காரணம்

தீயனூர்

இவ்வூரின் தொன்மையான பெயர் தீயனூர் என்பதாகும். இப்பெயரை தீயன்+ஊர்=தீயுனூர் எனப் பிரிக்கலாம். தீ போன்ற குணமுடையவனால் உருவாக்கப்பட்ட ஊர் என்பதால் தீயனூர் என்னும் பெயர் ஏற்பட்டது என்று பொருள் கொள்ளலாம். ஆதனூர், மூலனூர், நீலனூர், சோழனூர், கீரனூர் போன்ற ஊர்ப் பெயர்கள் இவ்வாறு ஆள்ப்பெயர்களால் ஏற்பட்டவையாகும். தீ என்னும் சொல்லுக்கு தூய்மை, வெப்பம், உஷ்ணம் என்னும் பலபொருள் உள்ளன. தீயைப் போன்றவன் அல்லது தீயைக் (அனல், அக்னி) கையில் ஏந்தி உள்ள சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயில் என்ற பொருளைப் பிரதிபலிக்கும் வகையில் இக்கோயில் இறைவன் அக்னீஸ்வரர் என்று கல்வெட்டில் அழைக்கப்படுகிறார்.

தற்பொழுது உடையவர்தீயனூர், பெருமாள் தீயனூர் என்னும் இரண்டு சிற்றூர்கள் உள்ளன. சிவன்கோயில் அமைந்துள்ள பகுதி உடையவர் தீயனூர் எனவும், விஷ்ணுகோயில் அமைந்துள்ள பகுதி பெருமாள் தீயனூர் எனவும் அழைக்கப்படுகிறது. சிவனை உடையார் எனவும், விஷ்ணுவை பெருமாள் எனவும் அழைக்கும் வழக்கம் இருப்பதால் உடையவர் தீயனூர் என்னும் பெயர் உண்டாயிற்று எனலாம்.

மனுகுலகேசரி நல்லூர்

சோழர் காலத்தில் இவ்வூருக்கு மனுகுலகேசரி நல்லூர் என்ற மற்றொரு சிறப்புப் பெயரும் இருந்துள்ளது என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. மனு+குல+கேசரி+நல்லூர் என்று இவ்வூர்ப் பெயரைப் பிரித்துப் பொருள்காணலாம். மனுகுலம் என்பது சோழர் குலத்தின் பெயராகும். மனு அல்லது மனு நீதிச் சோழனின் வழிவந்தவர்கள் என்பது இதற்குப் பொருள். கேசரி என்பது சிங்கத்தைக் குறிக்கும். நல்லூர் என்பதற்கு கோயிலுக்கு வழங்கப்பட்ட வளம் மிக்க நல்ல ஊர் என்று பொருளாகும். மனுகுலத்தில் பிறந்த சிங்கம் போன்றவன் என்பது மனுகுலகேசரி என்னும் பெயரின் திரண்ட பொருளாகும். இப்பெயர் கங்கை கொண்ட சோழபுரத்தை நிறுவிய முதலாம் இராஜேந்திரசோழனின் (1012–1044) இரண்டாவது மகனான சோழகேரளன் என்ற இளவரசனின் இயற்பெயர் என்பதை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன[2]. இதிலிருந்து இவ்வூர்ப் பெயர் இவ்விளவரசரின் பெயரால் **'தீயனூரான மனுகுலகேசரிநல்லூர்'** என அழைக்கப்பட்டதை இவ்வூர்க் கோயிலில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

இவ்வூருக்கு மனுகுலகேசரி நல்லூர் என்னும் பெயர் இருந்ததை கி.பி.1044, 1048–இல் கங்கைகொண்டசோழபுரத்தில் எழுதப்பட்ட

முதலாம் இராஜாதிராஜன் (1018–1053) கல்வெட்டால் அறிய முடிகின்றது[3]. **இதுவே இவ்வூரைப் பற்றிக் கிடைக்கும் தொன்மையான கல்வெட்டுச் சான்று ஆகும். இதிலிருந்து இவ்வூர் இன்றைக்கு 964 ஆண்டுகள் முற்பட்ட வரலாற்றுச் சிறப்பும், பழமையும் உடையது என்பது புலனாகிறது.**

சோழகேரளன் இராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்திலேயே சாளுக்கியருடன் நடைபெற்ற போரில் கி.பி.1021–இல் இறந்துவிட்டார்[4]. இராஜேந்திரனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த முதலாம் இராஜாதிராஜன் இறந்துவிட்ட தன்னுடைய தம்பியின் பெயரை (மனுகுலகேசரி) தீயனூருக்கு வைத்து அவ்வூரைக் கங்கைகொண்டசோழபுரத்தில் உள்ள மடத்தில் உணவு அளிக்க இறையிலியாகக் கொடுத்துள்ளார்.

இதேபோன்று மனுகுலகேசரி ஈஸ்வரம், சோழகேரள நாதர் கோயில், சோழகேரள விண்ணகர், சோழகேரள விடங்கர், சோழகேரள நல்லூர், சாளுக்கியான் சோழகேரளபுரம், சோழகேரளச்சேரி, சோழகேரளன் சாலை, சோழகேரள சதுர்வேதிமங்கலம், சோழகேரளன் வாய்க்கால், சோழகேரளன் திருமாளிகை (கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டப் பெற்ற மாளிகையின் பெயர்) என இந்த இளவரசரின் பெயரில் கோயில்கள், ஊர்கள், அரண்மனை, உணவுச்சாலை, வாய்க்கால் போன்றவைகள் உருவாக்கப்பட்டு பெயர்கள் வைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது[5].

இதன் பின் கி.பி.1166, 1216, 1251, 1429 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பெற்ற கல்வெட்டுகள் உடையவர்தீயனூர் ஜமதக்னீஸ்வரர் கோயிலில் உள்ளன. இவை முறையே இரண்டாம்இராஜராஜன் (1146–

1166), மூன்றாம்குலோத்துங்கன் (1166–1218), மூன்றாம்இராஜராஜன் (1216–1257), இரண்டாம்தேவராயர் (1422–1444) ஆகிய மன்னர்களின் காலங்களில் எழுதப் பெற்றவையாகும். **இக்கல்வெட்டுகளில் இவ்வூர்ப் பெயர் தீயனூரான மனுகுலகேசரி நல்லூர் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.** காலப்போக்கில் மனுகுலகேசரி நல்லூர் என்னும் பெயர் மறைந்து பழைய பெயரான தீயனூர் என்னும் பெயர் நிலைத்து சிவன் கோயில் அமைந்துள்ள குடியமர்வுப் பகுதியாதலால் உடையவர் என்னும் அடைமொழியுடன் சேர்த்து உடையவர்தீயனூர் என ஆகி இன்று வரை வழக்கத்தில் உள்ளது.

தலச்சிறப்பு

வில்வாரண்ய ஷேத்திரம்

இயற்கையான தட்பவெப்ப சீதோஷ்ண நிலை அடிப்படையில் அமைந்த வெப்பம் மிகுந்த பிரதேசம் என்பதால் தீயனூர் எனவும் இங்குள்ள சிவாலயம் அக்னீஸ்வரர் எனவும் அழைக்கப்படுகிறது. புராண காலத்தில் இப்பகுதி வில்வ மரங்கள் நிறைந்த வனப்பிரதேசமாக இருந்தமையால் வில்வாரண்யம் என அழைக்கப்பட்டது. இவ்வனத்தில் சப்தரிஷிகளில் ஒருவரான ஜமதக்னி என்னும் முனிவர் சிவபெருமானை நோக்கித் தவம் செய்ய இங்குவந்து தங்கி வில்வ மரத்தின் கீழ் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டுச் சிவனின் அருளைப் பெற்றார். ஜமதக்னியால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கம் அமைந்துள்ள கோயில் என்பதால் இதற்கு ஜமதக்னீஸ்வரர் திருக்கோயில் என்னும் பெயர் ஏற்பட்டது என்று ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

இவர் பரசுராமனின் தந்தை ஆவார். பரசுராமன் அரியலூருக்கு அருகில் உள்ள கீழப்பழுவூர் ஆலந்துறையார் திருக்கோயிலில் தவமிருந்து தன் தாயைக் கொன்ற தோஷம் நீங்கப் பெற்றதாக அவ்வூர்த்

தலபுராணம் குறிப்பிடுகிறது[6]. ஜமதக்னியின் சிற்பம் மேலப்பழுவூர் சுந்தரேஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ளது. இவை இப்பகுதியில் ஜமதக்னி முனிவர், பரசுராமர் ஆகியோர் தவம் புரிந்து வாழ்ந்த பகுதி என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மூர்த்தி, தலம், தீர்த்தம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புகளும் உடையவர்தீயனூருக்கு உள்ளன. ஜமதக்னியால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற தொன்மையான சிவலிங்கம் எழுந்தருளியுள்ள திருக்கோயில் இதுவாகும். பஞ்சபூத தலங்களில் அக்னி தலமாகத் திகழ்வது திருவண்ணாமலை. அதேபோல இயற்கையிலேயே அக்னீஸ்வரர் என்னும் திருநாமத்துடன் திகழ்வது இத்திருக்கோயிலின் சிறப்பாகும்.

திருக்கோயிலை ஒட்டியுள்ள தீர்த்தக் குளம் அக்னி தீர்த்தம் எனவும், இங்கு ஓடும் மருதையாறு புண்ணிய தீர்த்தமாகவும் திகழ்கிறது. ஜமதக்னியின் அறிவுரைப்படி தன்னுடைய தாய் ரேணுகாதேவியைக் கொன்ற தோஷம் நீங்கப் பெற பழுவூரில் தவமிருந்த பரசுராமர் பழுவூருக்கு வடக்கில் ஓடும் மருதையாற்றில் நாள்தோறும் தீர்த்தமாடி ஆலந்துறையாரை வழிபட்டு வந்தார் என்றும் கூறப்படுகிறது. எனவே இந்த நதிக்குப் பரசுராம நதி என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

ஸ்தல விருட்சம்

இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புகளும் அமையப் பெற்ற திருவக்னீஸ்வரர் ஆலயத்தின் ஸ்தல விருட்சமாக இருப்பது வில்வமரமாகும். அக்னியின் தன்மை கொண்ட மூலிகை வில்வமாகும். சிவன் அக்னி வடிவமாக இருப்பவன் என்பதால் வில்வமரம் சிவ பூஜைக்கும் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படவும் உகந்த மரமாக ஆன்றோர்களால் பூஜிக்கப்பட்டு வருகிறது.

தன்னை வழிபடுகின்ற ஆண், பெண் பக்தர்களுக்கு உஷ்ணத்தால் ஏற்படும் வயிற்றுவலி, கண் வலி, சூலை நோய் போன்ற பல்வேறு நோய்களைத் தீர்த்து வைக்கின்ற புண்ணிய ஷேத்திரமாகவும் இங்குள்ள கோயில் திகழ்கிறது. இக்கோயிலை வழிபடும் பெண்களுக்கு உள்ள நவகிரக தோஷங்கள், திருமணத் தடைகள், மகப்பேறு இன்மைப் போன்ற பல்வேறு குறைகள் நிவர்த்திக்கப் பெற்று பக்தர்கள் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வருவது பிரத்யட்சமாகும்.

சோழப் பெருமன்னர்கள் தஞ்சை, மேலப்பழுவூர், கங்கை கொண்டசோழபுரம், சிதம்பரம் ஆகிய இடங்களில் தங்களின் அரண்மனைகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். இவ்வூர்களுக்குச் செல்லும் பெருவழியில் அமைந்துள்ளது தீயனூரை அடுத்த விக்கிரம சோழபுரம் என அழைக்கப்பட்ட இன்றைய விக்கிரமங்கலம் என்னும் ஊராகும். இங்கு சோழர்களின் அரண்மனை இருந்தது என்பதை கல்வெட்டுகள் உணர்த்துகின்றன[7]. இவ்வூரை முதலாம் இராஜேந்திர சோழன் தன்னுடைய பட்டப் பெயரில் உருவாக்கினான்[8]. இவனுடைய மனைவி வானவன்மாதேவி ஆவார். இவருடைய பெயரில் பிராமணர்கள் வாழ்வதற்காக உருவாக்கப்பெற்ற ஊர் இன்றைய நாகமங்கலம் என்ற ஊராகும். இது வானவன் மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டது[9]. மனைவி, மன்னன் ஆகிய இருவரின் பெயர்களில் உருவாக்கப்பட்ட ஊர்களுக்கு நடுவில் அமைந்துள்ளது தீயனூராகும். இவ்வூருக்குத் தன்னுடைய தம்பி சோழகேரளனின் இயற்பெயரான மனுகுலகேசரி என்னும் பெயரைச் சூட்டி முதலாம் இராஜாதிராஜசோழன் மகிழ்ச்சியடைந்துள்ளார் என்பது வரலாற்றுக் குறிப்பாகும்.

இவ்வாறு வரலாற்றுச் சிறப்பு, பழமை, சப்தரிஷிகளின் வாழ்க்கையோடு தொடர்புடையது என்பன போன்ற சிறப்புகளும் பரிகார நிவர்த்தித் தலம் என்னும் ஆன்மிகச் சிறப்பும் அமையப் பெற்ற சிவத்தலமாக உடையவர் தீயனூர் திகழ்கிறது.

அடிக்குறிப்புகள்

1. இந்நூலாசிரியரால் செட்டித்திருக்கோணம், பெரியதிருக்கோணம், தூத்தூர் ஆகிய ஊர்களில் படிக்கப்பெற்ற கல்வெட்டுகளில் இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவணம் இதழ்–1, 1991, பக்.15–25, ஆவணம் இதழ்–16, ஜுலை 2005, பக்.46.

2. இல.தியாகராசன், சோழகேரளன், காமரசவல்லிப் பதிப்பகம், அரியலூர், 1991, பக்.42, 44.

3. ARE 82 of 1892, தென்னிந்திய கல்வெட்டுகள் மடலம் 4, எண்.529, வீரராஜேந்திர சோழன் கல்வெட்டு, கி.பி.1068.

> "கோவிராஜகேஸரி பந்மராந உடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவர்க்கு .... (கோயி)ல்த்தாநம் பண்ணி எழுந்தருளாநிந்று உடையார் **கங்கைகொண்ட**
>
> **சோழஈஸ்வரமுடையார் கோயிலைச் சூழ விட்ட ஊர்களுக்கு** ..... கல்லியாணபுரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளிந ஆனைமேல்த் துஞ்சிந அண்ணர்க்கு யாண்டு முப்பதாவது கடாரங்கொண்ட சோழ வளநாட்டு மதுராந்தகவளநாட்டு பவித்திரமாணிக்க நல்லூரும் இந்நாட்டு உலகளந்த சோழநல்லூரும் இந்நாட்டுக் கேரளாந்தக நல்லூரும் இந்நாட்டு மண்ணை கொண்ட

சோழநல்லூரும் **இந்நாட்டு மநுகுலகேசரிநல்லூரும்** இந்நாட்டு இருமடிசோ

ழநல்லூரும் **இந்நாட்டு நகரம் விக்கிரம சோழபுரமும்** மடங் . . . . ந்று வேறு அது போதவில்லை யெந்று மடங்களில் உண்ண. . . . . . .த நிவந்தக்காரோடு . . . . . கணக்கில் எழுதி . . . . .எந்று வீரராஜேந்த்ர ப்ராஹ்மாதிராஜந் நமக்குச் சொந்நமையில் **இவ்வூர்கள் மடப்புறமாகவருகிந்றபடி** கல்லியாணபுரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளி ஆயவம

. . . (இருபத்தா)ருவது முதல் பசாந முதல் . . . . இந்நாட்டு . . . . . . விக்கிரம . . . . . லூரும் இந்நாட்டு உலகளந்தசோழநல்லூரும் இந்நாட்டுக் கேரளாந்த கல்லூரும் இந்நாட்டு மண்ணைகொண்டசோழநல்லூரும் இந்நாட்டு மநுகுலகேசரிநல்லூரும் இந்நாட்டு இருமடி சோழநல்லூரும் வே

(றுவேறுஅளந்த)படி கல்லியாணபுரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளி ஆனைமேல் துஞ்சின அண்ணர்க்கு யாண்டு முப்பதாவது பசான முதல் தவிர்ந்து இவ்வூர்களும் இந்நாட்டு நகரம் விக்கிரமசோழபுரமும் ஆக இவ்வூர்களில் இந்நாட்டுப் பவித்திரமணிக்கநல்லூர் அளந்தபடி நிலம் . . . . . .

4. இல.தியாகராசன், சோழகேரளன், காமரசவல்லிப் பதிப்பகம், அரியலூர், 1991, பக்.42, 44.

5. மேலது, பக்.42–25.

6. கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயில் தலவரலாறு,

7. ARE 165 of 1894, SII V, No.458, 118 of 1927-28, 261 of 1924, 271 of 915, SII VII, No.460 & 461, 198 of 1923.

8. SII Vol.IV, No.529, 178 of 1956-57

9. இல.தியாகராஜன், பெ.இரவிச்சந்திரன், வே.செவ்வேள், செட்டித்திருக்கோணம் கல்வெட்டுகள், ஆவணம் இதழ்-16, ஜுலை 2005, பக்.44.

இயல் - 2

வரலாற்றுப் பின்னணி

பிற்காலச்சோழர் காலத்திலிருந்து தான் உடையவர்தீயனூர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன. இருப்பினும் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பழங்கால நாகரிகச் சின்னங்கள் தீயனூர்ப் பகுதியில் கிடைக்கின்றன. பழைய கற்காலம், புதிய கற்காலம், நுண்கற்கருவிகள் காலம் மற்றும் இரும்புக் காலம் எனப்படும் பெருங்கற்காலம் ஆகிய காலங்களைச் சேர்ந்த கல் ஆயுதங்களும், கருப்பு சிவப்பு பானை ஒடுகளும் தீய்னூர், நாகமங்கலம், காவனூர், விக்கிரமங்கலம், ஆலவாய், செட்டித் திருக்கோணம், விளாங்குடி, கோவிந்தப்புத் தூர், ஸ்ரீபுரந்தான் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன[1]. இவை தொல்பழங்கால மனிதர்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர் என்பதற்கான சான்றுகளாக உள்ளன.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பிற்காலப்பல்லவர் ஆட்சியை சிம்மவர்மபல்லவன் (540–558) நிறுவினார். இவரும் இவருடைய மகன் சிம்மவிஷ்ணுவும் (558–598) களப்பிரர்களை வென்று காவிரிபாயும் சோழநாட்டைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சியை விரிவுபடுத்தினர். சிம்மவர்மபல்லவர் தன் வாழ்வின் இறுதிக் காலத்தில் சிவனடியாராக மாறி ஐயடிகள் காடவர்கோன் என்னும் பெயருடன் சிவத்தலங்கள் தோறும் சென்று பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்களின் தொகுப்பு 'ஷேத்திர வெண்பா' என

அழைக்கப்படுகிறது. இதில் இவர் திருமழபாடிக்கு வந்து பாடிய பாடல் உள்ளது[2]. இதிலிருந்து பல்லவர் ஆதிக்கத்தின் தொடக்கத்திலேயே அரியலூர் பகுதி அவர்களின் ஆட்சியின் கீழ் வந்துவிட்டது என அறியமுடிகிறது.

சிம்மவிஷ்ணுவுக்குப் பின் (550–588) அவருடைய மகன் முதலாம் மகேந்திரவர்மன் (598–630) ஆட்சி செய்தார். இவர் காலத்தில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் தேவார நாயன்மார்கள் வாழ்ந்து சைவசமயத்தை வளர்த்தனர். சமண, புத்த சமயங்கள் இவர்களின் சமயப் பிரச்சாரத்தினால் வீழ்ச்சி அடைந்தன. சமணசமயத்தைப் பின்பற்றி வாழ்ந்த பல்லவ மன்னர் மகேந்திரவர்மனையும் திருநாவுக்கரசர் சைவ சமயத்திற்கு மாற்றினார். திருநாவுக்கரசரும், சம்பந்தரும் சிவத்தலங்கள் தோறும் சென்று தேவாரப் ப்திகங்கள் பாடி சைவ சமயத்தை வளர்த்தனர். உடையவர் தீயனூருக்கு அருகில் உள்ள கோவிந்தப்புத்தூர் இவ்விரண்டு நாயன்மார்களாலும் பாடப் பெற்ற தலமாகும்[3]. அதேபோல கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயிலும், திருமழபாடி வைத்தியநாதசுவாமி கோயிலும் இவர்களால் பாடப்பெற்ற சைவத் தலங்களாகும்[4]. இவர்களுக்குப் பிறகு வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் (கி.பி.9–ஆம் நூற்றாண்டு) திருமழபாடி இறைவன் மீது பாடிய 'பொன்னார் மேனியனே' என்று தொடங்கும் தேவாரப் பதிகம் மிகவும் புகழ்பெற்ற பதிகமாகும்[5]. அரியலூர் பெருமாள்கோயிலில் பல்லவர்கால ஸ்ரீவத்சம் என அழைக்கப்படும் லட்சுமியின் சிற்பம் இருப்பதும்[6] இவ்வூருக்கருகில் உள்ள கோவிந்தபுரத்தில் பல்லவர் கால செப்புக்காசு கிடைத்திருப்பதும்[7] பல்லவர் ஆட்சிக் காலச் சான்றுகளாக உள்ளன.

இவ்வாறு கி.பி.6–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர், சம்பந்தர் மற்றும் கி.பி.9–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் ஆகியோரால்

பாடப்பெற்ற தலங்கள் உடையவர்தீயனூரைச் சுற்றி இருப்பதாலும் பல்லவர்காலச் சிற்பங்களும், காசுகளும் கிடைத்திருப்பதாலும் பல்லவர் காலத்தில் அவர்களின் ஆட்சியின் கீழ் இப்பகுதி இருந்தது என்பது நன்கு புலனாகிறது. மேலும் சைவசமயம் இப்பகுதியில் செழிப்பாக வளர்ந்திருந்தது என்பதையும் நமக்குக் காட்டுகின்றன.

பிற்காலச் சோழர் காலம்

விஜயாலயசோழன் என்பவர் கி.பி.850–ஆம் ஆண்டு வாக்கில் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு சோழர் ஆட்சியை நிறுவினார். முதலாம்பராந்தகன் கி.பி.907 முதல் 955 வரை ஆட்சி புரிந்து பாண்டிய நாட்டையும், ஈழநாட்டையும் கைப்பற்றியதுடன் வடக்கே நெல்லூர் வரை தன்னுடைய ஆட்சியை விரிவுபடுத்தினார். தீயனூருக்கு அருகில் உள்ள கோவிந்தபுத்தூர், ஸ்ரீபுரந்தான் உள்ளிட்ட ஊர்களை உள்ளடக்கி **ஸ்ரீபராந்தகச்சதுர்வேதிமங்கலம்** என்னும் மிகப்பெரிய பிரம்மதேய ஊர் இம்மன்னரால் உருவாக்கப்பட்டது. இச்சதுர்வேதிமங்கலத்தின் தலைமைக் கிராமமாகத் திகழ்ந்த ஸ்ரீபராந்தகச்சதுர்வேதிமங்கலம் என்ற ஊர்ப் பெயர் மருவி தற்பொழுது ஸ்ரீபுரந்தான் என ஆகிவிட்டது[8].

முதலாம்ஆதித்தன் (871–907) காலம்முதல் சோழவம்சத்தின் கடைசி மன்னனான மூன்றாம்இராஜேந்திரன் (1246–1279) வரை எழுதப்பட்ட கல்வெட்டுகள் அரியலூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஊர்களில் உள்ளன. குறிப்பாக திருமழபாடி, கீழப்பழுவூர், மேலப்பழுவூர், கோவிந்தப்புத்தூர், காமரசவல்லி, உடையவர்தீயனூர், விக்கிரமங்கலம், செட்டித்திருக்கோணம்,பெரியதிருக்கோணம், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய ஊர்களில் உள்ளன[9]. இச்சான்றுகள் மூலம் தீயனூர் அமைந்துள்ள பகுதிமுழுவதும் சோழர் ஆட்சியின்கீழ் இருந்தது என்பதைக் காட்டுகின்றன.

கங்கைகொண்டசோழபுரம் தலைநகரம் நிறுவப்படுதல்

சோழமன்னர்களில் மிகவும் புகழ்மிக்கவர் முதலாம் இராஜேந்திரசோழன் (1012–1044) ஆவார். கி.பி.1023–இல் கங்கை வரை படையெடுத்து வென்று அவ்வெற்றியின் நினைவாக கி.பி.1025–இல் கங்கைகொண்டசோழபுரம் என்னும் மிகப்பெரிய நகரத்தை உருவாக்கி அங்கு கங்கைகொண்டசோழீஸ்வரர் என்னும் பெயரில் மாபெரும் கோயிலை கி.பி.1025–1036–ஆம் ஆண்டுகளுக்குள் கட்டியுள்ளார். இவ்வூருக்கு மேற்கில் சோழகங்கம் என்னும் பெயரில் மாபெரும் ஏரியையும் வெட்டினார். அது தற்பொழுது பொன்னேரி என அழைக்கப்படுகிறது. இவர் தனது தலைநகரத்தையும் தஞ்சாவூரிலிருந்து இவ்வூருக்கு மாற்றிக் கொண்டார். இந்த தலைநகர மாற்றத்திற்குப் பிறகு உடையவர்தீயனூர் அமைந்துள்ள பகுதிமுழுவதும் சோழர் ஆட்சியின் முக்கியப் பகுதிகளாக மாறத்தொடங்கின.

உடையவர்தீயனூரைச் சுற்றி வணிக நகரமும், பிரம்மதேய ஊரும், சோழர்களின் அரண்மனை கட்டப்பெற்ற நகரமும் உருவாயின. தீயனூருக்குச் செல்லும் வழியில் உள்ள நாகமங்கலம் என்ற ஊர் முதலாம் இராஜேந்திரசோழரின் மனைவியான வானவன்மாதேவியின் பெயரால் **வானவன்மாதேவிச்சதுர்வேதிமங்கலம்** என பிராமணர்கள் வாழும் பிரம்மதேய ஊராக உருவாக்கப்பட்டது. இவ்வூர்ப் பெயரைச் செட்டித்திருக்கோணம் இரணேஸ்வரர் கோயிலில் உள்ள முதலாம் இராஜாதிராஜ சோழனின் கல்வெட்டு குறிப்பிடுகிறது[10]. இதேபோன்று செட்டித்திருக்கோணம், பெரியத்திருக்கோணம் ஆகிய இரண்டு ஊர்களும் **மதுராந்தகபுரம்** என்னும் பெயரில் மிகப்பெரிய வணிகநகரமாக இராஜேந்திரன் சோழன் காலத்தில் உருவாக்கப்பட்டது[11].

மேலும் தீயனூருக்கு அருகில் உள்ள இன்றைய விக்கிரமங்கலம் இம்மன்னர் காலத்தில் அவர் பெயரில் **விக்கிரமசோழபுரம்** என்னும் நகரமாக உருவாக்கப்பட்டது. இங்கு சோழமன்னர்கள் வந்துதங்கும் அரண்மனைகள் கட்டப்பட்டன. இவற்றில் தங்கியிருந்து மன்னர்கள் அரசாணைகள் வெளியிட்டதை கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது[12].

மேலும் உடையவர்தீயனூர், விக்கிரமசோழபுரம் உள்ளிட்ட ஐந்து ஊர்களை முதலாம்இராஜாதிராஜசோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்த மடத்தில் நாள்தோறும் சோறு வழங்குவதற்காக மடப்புற இறையிலியாக தானமாகக் கொடுத்துள்ளார்[13].

இவ்வாறு கங்கைகொண்டசோழபுரம் உருவான பிறகு தீயனூரைச் சுற்றியுள்ள ஊர்கள் பிரம்மதேயமாக, வணிக நகரமாக, மடப்புற. இறையிலியாக, சோழமன்னர்கள் வந்துதங்கும் அரசியல் முக்கியத்துவமிக்க நகரமாக மாறியுள்ளன என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

தீயனூரைப் பற்றிய முதல் கல்வெட்டுச்சான்று கங்கைகொண்டசோழபுரத்தில் எழுதப்பட்டுள்ள வீரராஜேந்திரனின் கல்வெட்டில் (கி.பி.1068) கிடைக்கிறது. இது இம்மன்னரின் அண்ணன் முதலாம் இராஜாதிராஜன் தீயனூரை கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்த மடத்திற்கு இறையிலியாக கொடுத்தது பற்றிக் கூறுகிறது.

இதன்பின் தீயனூரில் உள்ள சிவன்கோயிலில் இரண்டாம் இராஜராஜன், மூன்றாம்குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் ஆகிய சோழமன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன. இவை முதலாம் இராஜாதிராஜன் காலம்முதல் (கி.பி.1018–1053) மூன்றாம் இராஜராஜன்

(கி.பி.1216–1257) வரை இச்சோழ மன்னர்களின் காலத்தில் சிறப்புடன் திகழ்ந்ததற்குச் சான்றுகளாக உள்ளன.

இதன்பின்னர் இவ்வூரைப் பற்றியக் குறிப்பு கி.பி.1428–29–இல் எழுதப்பட்ட விஜயநகர மன்னர் இரண்டாம்தேவராயர் காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டில் கிடைக்கிறது. அதன்பின் உடையவர்தீயனூரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

அரியலூர் பாளையக்காரர் ஆட்சியின் கீழ்

விஜயநகரக் காலத்தில் செஞ்சி மற்றும் மதுரை நாயக்கர்களின் கீழ் அரியலூரைத் தலைநகராகக் கொண்டு பாளையக்காரர்களின் ஆட்சி நிறுவப்பட்டது. அரியலூர் பாளையக்காரர் ஆட்சியின் கீழ் தீயனூர் பகுதி இருந்துள்ளது. குணமங்கலம், செட்டித்திருக்கோணம், விக்கிரமங்கலம் ஆகிய ஊர்களில் 'அரியலூர் அரசுநிலையிட்ட ஒப்பிலாதமழவராயர், விஜயஒப்பிலாதமழவராயர் ஆகிய பாளையக்காரர்களின் கல்வெட்டுகள் உள்ளன[14].

இச்சான்றுகளின் மூலம் 19–ஆம் நூற்றாண்டு வரை சிறப்பான வரலாற்றுப் பின்னணியைத் தீயனூர் மற்றும் இவ்வட்டாரத்து ஊர்கள் பெற்றுத் திகழ்ந்ததைக் காட்டுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. L.Thyagarajan, *Historical Archaeology of the Ariyalur Region Upto A.D.1817 – A Study,* Ph.D., Thesis, Bharathidasan University, 1999, pp.A35-37 ; K.Rajan, V.P.Yathishkumar, S.Selvakumar, *Catelogue of Archaeological Sites in Tamilnadu,*

Heritage India Trust, Thanjavur, 2009, Vol. I, pp.63-86, Vol.II pp.5-60.

2. ஷேத்திர வெண்பா, பாடல் எண்.18.

3. மூவர் தேவாரம், தலமுறை, பக்.341–344.

4. மூவர் தேவாரம், தலமுறை, பக்.417–419, 406–417.

5. மூவர் தேவாரம், தலமுறை, பக்.415–417.

6. இல.தியாகராஜன், அரியலூரில் பல்லவர் கால திருமகள் சிற்பம், ஆவணம் இதழ்–5, ஜூலை 1994, பக்.45.

7. இக்காசு கோவிந்தபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியை மா.திலகவதி என்பவரால் அப்பள்ளி மாணவரிடம் இருந்து சேகரிக்கப்பெற்று அரியலூர் அரசுக் கலைக் கல்லூரி வரலாற்றுத் துறை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

8. இக்கோயில் கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு பற்றி 16.3.1983, 22.1.1986 நாளிட்ட தினமலர் செய்தித்தாளில் இந்நூலாசிரியரால் கட்டுரை வெளயிடப் பெற்றுள்ளது. இவ்வூர்க் கள ஆய்வில் கலந்து கொண்டு உதவிய அரியலூர் சப்.கலெக்டர் மு.கலைவாணன், வரலாற்றுப் பேராசிரியர் சே.பாண்டியன், மாணவர்கள் இரா.கலையரசன், ரெ.ராஜகோபால், வை.கொளஞ்சிநாதன் ஆகியோருக்கு நன்றி;

இல.தியாகராஜன், ஸ்ரீபுரந்தான் சிவன் கோயில் கல்வெட்டுகள், ஆவணம் இதழ்–16, ஜூலை 2005, பக்.73–78.

9. L.Thyagarajan, *Historical Archaeology of the Ariyalur Region Upto A.D.1817 – A Study,* Ph.D., Thesis, Bharathidasan University, 1999, pp.A3-A26.

10. இல.தியாகராஜன், திருக்கோணம் கல்வெட்டுகள், ஆவணம் இதழ்–1, 1991, பக்.15–25.

11. இல.தியாகராஜன், மறைந்துபோன வணிக நகரம் மதுராந்தகபுரம், கல்வெட்டு காலாண்டு இதழ், எண்.37, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, 1991, சென்னை, பக்.12–24

12. இல.தியாகராஜன், அரியலூர்க் கோட்டத்தில் வரலாற்றுச் சுவடுகள் (ஆய்வுக் கட்டுரை), கல்வெட்டுக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், ஜுன் 10–12, 1984; மறைந்துபோன வணிக நகரம் விக்கிரமசோழபுரம், அரசினர் கலைக் கல்லூரி, அரியலூர், ஆண்டுமலர், 1991, பக்.27–33.

13. கல்வெட்டு ஆண்டுஅறிக்கை எண்.82 of 1892; தென்னிந்திய கல்வெட்டுக்கள் மடலம் 4, எண் : 529.

14. L.Thyagarajan, Historical Archaeology of the Ariyalur Region Upto A.D.1817 – A Study, Ph.D., Thesis, Bharathidasan University, 1999, pp.A35-37.

இயல் - 3

ஜமதக்னீஸ்வரர் கோயிலின் அமைப்பு, காலம், கட்டடக் கலை

கோயிலின் அமைப்பு

ஊருக்குள் செல்லும் சாலையில் சிறிது தூரம் நடந்து சென்று வலதுபுறம் திரும்பியவுடன் நாம் காண்பது இக்கோயிலாகும். ஊருக்கு வடகீழ் மூலையில் (ஈசானிய திசை) ஜமதக்னீஸ்வரர்கோயில் கிழக்கு திசையைப் பார்த்தபடி கட்டப்பெற்றுள்ளது. கோயிலைச் சுற்றி பெரியவீதிகள் அமைந்துள்ளன. கோயிலுக்குப் பின்பக்கம் மேற்கு திசையில் அக்னிதீர்த்தம் என்னும் திருக்குளம் அமைந்துள்ளது. தாமரைச்செடிகள் நிறைந்து பசுமையுடன் பூக்களோடு இக்குளம் காட்சித் தருகிறது.

கோயிலின் முன் அழகிய பலிபீடம், நந்தி மண்டபம் ஆகியவை உள்ளன. இவற்றை ஒட்டி தென்திசையில் வடக்கு நோக்கியபடி கோயில் குருக்களின் வீடு அமைந்துள்ளது. கோயிலின் நுழைவாயிலில் வெள்ளைக் கல்லினால் கட்டப்பெற்ற கோபுரம் உள்ளது. இது 21 அடி அகலமும், 16.6 அடி நீளமும், 13 அடி உயரமும் உள்ளது. அடித்தளம் மட்டும் கட்டப்பெற்று மேல்பகுதி மொட்டையாக விடப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு ஒரு திருச்சுற்று மதில் மட்டுமே உள்ளது. கோபுரத்தை நடுவமாகக் கொண்டு இத்திருச்சுற்று மதில் வடக்கு தெற்காக 44.6 அடி அகலமும், கிழக்கு மேற்காக 113.6 அடி நீளமும் சுமார் 12 அடி உயரமும் கொண்டதாக அமைந்துள்ளது.

கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றால் நாம் நிற்பது அம்மன் சன்னதியும் அதன் எதிரில் உள்ள மகாமண்டபமும் ஆகும். இம்மண்டபம் வரிசைக்கு 5 வீதம் நான்கு வரிசைகளில் 20 தூண்கள் நிறுத்தப்பெற்று கட்டப்பெற்றுள்ளது. இத்தூண்கள் 6.10 அடி உயரம் உள்ளது. இம்மண்டபம் வடக்குத் தெற்கில் 24.9 அடி அகலமும், கிழக்கு மேற்கில் 29.6 அடி நீளமும் உள்ளது. இதன் வடக்கில் தெற்கு நோக்கியபடி அம்மன் சன்னதி கட்டப்பெற்றுள்ளது. அம்மன் சன்னதியின் முன்புறம் வடகீழ் மூலையில் நவகிரக சன்னதி அமைந்துள்ளது. இம்மண்டபத்து மேற்கு, தென்திசை ஓரம் திண்ணை அமைக்கப் பெற்று அதில் தேவார மூவர் சிற்பங்களும், விநாயர், நந்திதேவர் சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தைத் தாண்டி உள்ளே சென்றால் அர்த்தமண்டபமும், அதைத்தாண்டி ஜமதக்னீஸ்வரர் எழுந்தருளியிருக்கும் கருவறை ஆகிய கட்டிடப்பகுதிகளைக் காணலாம். அர்த்தமண்டபத்தின் தென்பக்கமும், வடக்குப் பக்கமும் ஒரு நுழைவாயில்கள் உள்ளன. தென்பக்க வாயில் அருகே இரண்டு தூண்களை நிறுத்தி சோபான மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அம்மன் சன்னதிக்கு முன் உள்ள மண்டபத்தின் தெற்குப்பகுதி வழியாக முதல் பிரகாரத்தை அடையலாம். இப்பிரகாரத்தில் தென்கீழ் மூலையில் மடப்பள்ளி அமைந்துள்ளது. வடமேற்கு மூலையில் விநாயகர் சன்னதி உள்ளது. இச்சன்னதியின் பின்பக்கம் மதில் சுவற்றை ஒட்டி வரிசையாக தூண்களை நிறுத்தி அறைகளாகத் தடுத்துள்ளனர். இதில் நடுவில் உள்ள அறை சுப்ரமணியர் சுவாமி (முருகன்) சன்னதியாக உள்ளது. மீதி அறைகள் காலியாக உள்ளன. முதல் பிரகாரத்தின் வடக்குப்பக்கம் அர்த்தமண்டபத்தை ஒட்டி சண்டிகேஸ்வரர் சன்னதியும் அதன் கிழக்கில் திருமஞ்சனக் கிணறும் உள்ளன.

கோயிலின் காலம்

இக்கோயிலின் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், கோபுரம், திருச்சுற்று மதில், நந்திமண்டபம், பலிபீடம், விநாயகர், சண்டிகேஸ்வரர் சன்னதி ஆகிய அனைத்தும் ஒரே காலத்தில் கட்டப் பெற்றவையாகும். இக்கோயிலை எந்த மன்னர், எந்த ஆண்டில் கட்டினார் என்று குறிப்பிடும் நேரடிக் கல்வெட்டுச் சான்றுகள் எதுவும் இங்கு இல்லை. மாறாக இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் மிகப் பழமையானது எது என்பதின் அடிப்படையிலும் கோயிலின் அமைப்பு சிற்பங்களின் முகஅமைதி ஆகியவற்றின் அடிப்படையிலும் இக்கோயிலின் காலத்தைக் கணிக்க வேண்டியுள்ளது.

அதன்படி இக்கோயிலில் கிடைக்கும் மிகப்பழமையான கல்வெட்டு. இரண்டாம் இராஜராஜசோழனின் (1146–1166) 20–ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1166) எழுதப்பட்டதாகும். அதாவது இன்றைக்கு 844 ஆண்டுகளுக்கு முன் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. இதன்படி இக்கோயில் இம்மன்னர் காலத்தில் 844 ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்றது என உய்த்துணரலாம். மேலும் இக்கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தி (தலைப்பகுதி), விஷ்ணு, பிரம்மா, துவாரபாலகர் ஆகிய சிற்பங்களும், செப்புத்திருமேனிகளும் இரண்டாம் இராஜராஜன் தாராசுரத்தில் கட்டியுள்ள கோயிலில் இருக்கும் சிற்பங்களின் முகஅமைதியை ஒத்துள்ளதால் இம்மன்னர் காலத்தில் தான் இக்கோயில் கட்டப்பெற்றது என்றும் கணிக்கலாம்.

கட்டடக்கலை

இக்கோயில் முழுவதும் அரியலூரர்ப் பகுதியில் கிடைக்கின்ற வெள்ளைச் சுண்ணாம்புக் கல்லினால் கட்டப்பெற்றுள்ளது. இவற்றில் ஏராளமான கடல்வாழ் உயிரினங்களின் புதைப்படிமங்களான பாசில்கள்

(Fossils) படிந்திருப்பதையும் காண முடிகிறது. இத்தகைய வெள்ளைக் கல்லும் திருச்சுற்றுமதில் கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ள செம்பராங்கல் என அழைக்கப்படும் சிவப்புநிற மணல் கலந்த கற்களும் இவ்வூருக்கு அருகில் உள்ள உல்லியக்குடி, அம்பாபூர் பகுதிகளில் பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன.

கோயிலின் முன் உள்ள பலிபீடம் (படம் 1) அழகிய கலை நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. 4.3 அடி உயரமும், 18.6 அடி சுற்றளவும் உடைய இப்பலிபீடத்தின் உச்சிப் பலகை 4 அடி நீள அகலத்துடன் அமைந்துள்ளது. பலகையின் நடுவில் கவிழ்த்து வைத்த தாமரைப் பூ போல பலிபீடத்தின் உச்சிப் பகுதி அமைந்துள்ளது. வெள்ளைக் கல்லினால் வடிக்கப்பட்டுள்ள இப்பலிபீடம் தாராசுரம் கோயிலில் உள்ள பலிபீடத்தின் கலை நயத்துடன் இருப்பது குறிப்பிடத்தக்கது. பூஜையின் போது திசை தெய்வங்களுக்கு நிவேதனம் வைத்து படைப்பதற்கு உருவாக்கப்பட்டது பலிபீடமாகும்.

பலிபீடத்தின் முன் உள்ள நந்தி மண்டபம் சாதாரணக் கற்களைக் கொண்டு கட்டப்பெற்றுள்ளது. (படம் 2)

இராஜகோபுரமாக அமைந்துள்ள முதல் தளம் மட்டும் உடைய மொட்டைக் கோபுரம் அதிஷ்டானம், ஜகதி, கண்டம், பட்டிகை, வேதிகை, சுவர்ப்பகுதி, பிரஸ்தரம் ஆகிய கட்டடக் கூறுகளுடன் கட்டப் பெற்றுள்ளது. (படம் 3)

ஜமதக்னீஸ்வரர் கோயிலின் கருவறை 12.10 அடி நீள அகலத்துடன் சதுரவடிவில் அமைந்துள்ளது. உபானம், அதிஷ்டானம், முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை, கண்டம், வேதிகை ஆகிய உறுப்புக்களுடன் உள்ளது. கருவறையின் உயரம் உபானம் முதல் பிரஸ்தரம் வரை 12.3 அடி ஆகும். முப்பட்டைக்குமுதம் வரை தற்பொழுது

பூமியில் புதைந்து உள்ளது. சுவர்ப் பகுதியில் அரைத்தூண்களும், தேவகோஷ்டங்களும் அமைக்கப் பெற்றுள்ளன. பிரஸ்தரத்தின் மேல் பூதகண வரிசைகள் உள்ள கூரை அமைந்துள்ளது. பூதகண வரிசைக்குப்பதில் தாமரை இதழ்கள் போன்ற வடிவஅமைப்பில் கூரை அமைக்கப்பட்டுள்ளது. கூரையின் மேல் கொடுங்கை வரியும் அதில் கர்ணக் கூடுகளும் அமைந்துள்ளன. இதன்மேல் வியாளவரி அமைந்துள்ளது. அதன் மேல் வேசர வடிவில் உருண்டையான விமானம் செங்கல் சுதை ஆகியவற்றால் கட்டப் பெற்றுள்ளது. விமானத்தில் அந்தந்த திசைகளுக்கு உரிய தெய்வங்கள் சுதை வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. தெற்கில் தட்சிணாமூர்த்தி, மேற்கில் விஷ்ணு, வடக்கில் பிரம்மா, கிழக்கில் சோமாஸ்கந்தர் சிற்பங்களும் நடுநடுவே விநாயகர், இந்திரன், வாயு, அக்னி போன்ற திசை தெய்வங்களின் உருவங்க்ளும் அமைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் நான்கு பக்க்ங்களிலும் மகாநாசி என்னும் அமைப்பு உள்ளது. உச்சியில் அழகிய விரிந்த தாமரை அமைப்பின் நடுவே கலசம் சொருகி வைக்கப்ப்ட்டுள்ளது. விமானத்தின் நான்கு மூலைகளிலும் அழகிய நந்தி உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன.

கருவறையின் முன் நோக்கி அர்த்தமண்டபம் 8 அடி நீளத்திலும் அதன் முன்னே மகாமண்டபம் 26.6 அடி நீளத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் கட்டட அமைப்புக் கூறுகளுடன் இவை உள்ளன. அர்த்தமண்டபத்தில் வடக்கு, தெற்கு சுவரில் தேவகோட்டங்கள் உள்ளன. இதேபோன்று கருவறையின் தெற்கு, மேற்கு, வடக்குச் சுவரில் தேவகோட்டங்கள் அமைக்கப்பட்டு அந்தந்த திசைகளுக்குரிய தெய்வங்களின் சிற்பங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

அர்த்தமண்டபத்தின் வடக்குச் சுவர் ஓரம் முழுவதும் வெள்ளைக் கல்லினால் கட்டப் பெற்ற சண்டிகேஸ்வரர் சன்னதி உள்ளது. இச்சன்னதியின் அடிப்பகுதி தரையில் புதைந்துள்ளது. சுவர்ப்பகுதியிலிருந்து உச்சிவரை மட்டுமே காணமுடிகிறது. இச்சன்னதியின் உச்சியில் உள்ள விமானம் அழகிய உருண்டை வடிவத்தில் கட்டப் பெற்றுள்ளது. நான்கு பட்டைகளுடன் உச்சியில் கலசத்துடன் இச்சன்னதி அழகுற கட்டப் பெற்றுள்ளது. (படம் –4)

இக்கோயிலின் தெற்குத் திருச்சுற்றில் வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கியபடி கணபதி சன்னதி அமைந்துள்ளது. இதனுள் ஸ்தல விநாயகர் எழுந்தருளியுள்ளார். இச்சன்னதியின் கட்டட அமைப்பு மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களை உடைய்து. அதாவது விமான வகைகளில் ஒன்றான கஜபிருஷ்ட (தூங்கானை மாடக்கோயில்) விமான வடிவத்தில் இச்சன்னதியின் விமானம் கட்டப்பட்டுள்ளது. ஆனால் அடிப்பகுதி ஒங்கார வடிவத்தில் அமையாமல் சதுரவடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. இதேபோல அரியலூர் அருகே உள்ள வாலாஜா நகரத்தில் அமைந்துள்ள சிவன்கோயில் அடிபீடம் முதல் பிரஸ்தரம் (கூரைப்பகுதி) வரை கஜபிருஷ்ட வடிவத்திலும், உச்சி விமானம் வேசர–உருண்டை வடிவத்திலும் கட்டப்பட்டுள்ளன. அரியலூருக்கு வடக்கில் வெள்ளாற்றங்கரையில் உள்ள பெண்ணாகடம் சிவன்கோயில் அடி முதல் உச்சி விமானம் வரை கஜபிருஷ்ட விமான வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கலைப் பாணியை வித்தியாசமான முறையில் வாலாஜா நகரத்திலும் தீயனூரிலும் சிற்பக் கலை வல்லுநர்கள் பின்பற்றி ஒரு பகுதியை கஜபிருஷ்டமாகவும் மற்றொரு பகுதியை வேறு விதமாகவும் அமைத்துக் கட்டியுள்ளனர். எதற்காக இத்தகைய வித்தியாசக் கலைப்பாணியை பின்பற்றினர் என்று அறிய முடியவில்லை என்றாலும் அரியலூர் மாவட்டத்தில் இத்தகைய கஜபிருஷ்ட விமானக் கலைப்பாணி கட்டடக்

கலை முறை இருந்துள்ளது என்பதற்கு இவை சிறந்த சான்றுகளாக உள்ளன. வாலாஜா நகரம் கோயில் விஜயநகர நாயக்கர் காலத்தில் இவ்வாறு கட்டப்பெற்றதை இக்கோயில் புறச்சுவரில் உள்ள விஜயநகரக் கால சிறு சிற்பங்களைக் கொண்டு அறிய முடிகிறது. தீயனூர்க் கோயிலில் உள்ள விநாயகர் சன்னதியும் விஜயநகர நாயக்கர் காலத்தில் கட்டப் பெற்றிருக்கக் கூடுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. இச்சன்னதியில் உள்ள ஒரே ஒரு கல்வெட்டும், பழமையான கல்வெட்டும் விஜயநகர மன்னர் இரண்டாம் தேவராயரின் காலத்தில் கி.பி.1428–29–இல் எழுதப்பட்டதாகும். எனவே இச்சன்னதி இம்மன்னர் காலத்தில் கட்டப் பெற்றிருக்குமோ என்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இருப்பினும் இங்குள்ள சண்டிகேஸ்வரர் சன்னதியைப் போன்ற கட்டட அமைப்பைப் போல கணபதி சன்னதியும் இருப்பதால் இவை இரண்டுமே பிற்கால்ச் சோழர் காலத்தில் கட்டப்பெற்றது எனக் கருதலாம்.

அம்மன் சன்னதி மிக எளிமையாக, விமானம் கூம்பு வடிவ அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. சன்னதியின் சுவர்களும் பிற்காலத்தில் கட்டப்பெற்றவையாகும். இவை 1968–இல் இக்கோயில் திருப்பணி செய்யப்பட்ட போது கட்டப்பெற்றவை என்று இவ்வூர் மக்கள் கூறுகின்றனர். இவ்வாறு ஜமதக்னீஸ்வரர் கோயில் இரண்டாம் இராஜராஜசோழர் (1146–1166) காலத்தில் கட்டப்பெற்று பிற்காலச் சோழர்காலக் கலைப்பாணியிலான கட்டடக்கலைக் கூறுகளுடன் திகழ்கிறது.

இயல் – 4

சிற்பங்கள், செப்புத் திருமேனிகள்

ஜமதக்னீஸ்வரர் கோயிலில் அழகிய சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் உள்ளன. இவை கோயில் வழிபாட்டிற்கும் சமய, கலை வரலாற்றிற்கும் சிறந்த சான்றுகளாக உள்ளன. இங்குள்ள சிற்பங்களைக் கருவறை தேவகோஷ்டச் சிற்பங்கள், பரிவாரச் சன்னதி சிற்பங்கள், உதிரிச் சிற்பங்கள் என வகைப்படுத்தலாம்.

சிற்பங்கள்

கருவறைச் சிவலிங்கத் திருமேனி (படம் 1)

இக்கோயில் மூலவராய் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஜமதக்னீஸ்வரர் சிவலிங்கத் திருமேனியராய் காட்சியளிக்கின்றார். கருங்கல்லால் ஆன சதுர வடிவில் அமைந்த பலகை போன்ற பீடத்தின் மேல் 2.7 அடி உயரம் உடைய பாணமும், 5.3 அடி சுற்றளவுடைய ஆவுடையாரும் கொண்ட சிவலிங்கமாக லிங்கத்தில் ருத்ரபாகம் மட்டும் வெளியே காணுமாறு உள்ளது. பிரம்மா, விஷ்ணு பாகங்கள் பூமியின் கீழ் மறைந்துள்ளன. லிங்கத்தின் முன்புறம் பிரம்ம சூத்திரம் வரையப் பெற்றுள்ளது. வடக்கு நோக்கியபடி கோமுகம் உள்ளது. ஆவுடையாரின் கீழ்ப்பகுதி விரிந்த தாமரை இதழ் வடிவத்தில் செதுக்கப்பெற்றுள்ளது. அழகிய கருங்கல்லில் வடிக்கப்பெற்ற இச்சிவலிங்கம் மிகவும் பளபளப்பான கலை அழகுடன் மிளிர்கிறது.

கருவறை தேவகோஷ்டச் சிற்பங்கள்

இக்கோயில் கருவறையின் தெற்கு, மேற்கு, வடக்கு தேவகோஷ்டங்களில் முறையே தட்சணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா ஆகிய தெய்வங்களின் சிற்பங்கள் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளன.

அர்த்தமண்டபத்தின் தெற்குச் சுவர் கோஷ்டத்தில் விநாயகரும், வடக்குச் சுவர் தேவகோஷ்டத்தில் துர்கையின் மகிஷவாகனம் (எருமைத் தலை) மட்டும் உள்ளது. அதன் மேல் துர்க்கை இல்லை. அதற்குப்பதில் லிங்கோத்பவர் என்னும் அடிமுடிகாணா அண்ணல் எனப்படும் அண்ணாமலையாரின் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

தட்சிணாமூர்த்தி

தெற்குச்சுவர் தேவகோஷ்டத்தில் உள்ள தட்சணாமூர்த்தி அண்மைக் காலத்தில் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ள மிகச்சிறிய புதிய சிற்பமாகும். பழைய சிற்பம் திருப்பணியின் போது உடைந்துவிட்டது. அதன் தலைப் பகுதி மட்டும் இக்கோயிலில் இருந்தது. (படம் 2) ஆனால் அச்சிற்பம் தற்பொழுது கங்கைகொண்டசோழபுரம் அருங்காட்சியத்திற்கு எடுத்துச் செல்லப்பெற்று அங்கு வைக்கப்பட்டுள்ளது. தென்திசைக் கடவுளாக வழிபடப்படுபவர் தட்சணாமூர்த்தியாவார். இவர் கல்லால மரத்தின் கீழ் வீராசனக் கோலத்தில் எழுந்தருளி ஜனகாதிமுனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்யும் குருவாக வடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுவது மரபாகும்.

விஷ்ணு (படம் 3)

கருவறை மேற்குச் சுவர் தேவகோஷ்டத்தில் லிங்கோத்பவர், மகாவிஷ்ணு ஆகிய சிற்பங்கள் பிரதிஷ்டை செய்யப்படுவது சிற்பக் கலை மரபாகும். திருமழபாடி வைத்தியநாத சுவாமி கோயில், கங்கைகொண்டசோழபுரம் சிவன் கோயில், கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயில் கருவறை மேற்குச் சுவரிலும், காமரசவல்லி சௌந்தரேஸ்வரர் கோயில் ஆகிய சிவன் கோயில் மேற்குச் சுவரிலும் லிங்கோத்பவர் சிற்பங்கள் உள்ளன. இவரின் இருபக்கமும் விஷ்ணுவும், பிரம்மாவும் சிவனின் அடிமுடியைத் தேடிக் காண முடியாமல் தோற்று வணங்கி

நிற்பது போன்று சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. கோவிந்தப்புத்தூர் சிவன் கோயில் கருவறை மேற்கு தேவகோஷ்டத்தில் மகாவிஷ்ணுவின் சிற்பம் உள்ளது.

தீயனூர் கோயிலிலும் கருவறை மேற்குச்சுவரில் மகாவிஷ்ணுவின் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது. 3.7 அடி உயரத்தில் நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் உள்ள இவருடைய கீழ் வலது கரம் அபயஹஸ்தத்தில் உள்ளது. வலது கரம் தொடையில் ஊன்றி உள்ளது. மேல் வலக்கரத்தில் சக்கரமும், இடக்கரத்தில் சங்கும் உள்ளன. தலையில் கரண்டமகுடம் அலங்கரிக்கிறது. இடுப்பிலிருந்து கணுக்கால் வரை பீதாம்பரம் உள்ளது. கழுத்து, தோள், கணுக்கை, கணுக்கால் ஆகிய இடங்களில் அழகிய அணிகலன்கள் உள்ளன. புன்னகை தவழ சமபங்க கோலத்தில் வடிக்கப்பெற்றுள்ள இச்சிற்பம் இக்கோயில் கட்டப் பெற்ற இரண்டாம் இராஜராஜன் காலத்திய மிகவும் அழகான சிற்பமாகும்.

பிரம்மா (படம் 4)

கருவறை வடக்குத் தேவகோஷ்டத்தில் 3.7 அடி உயரத்தில் பத்மபீடத்தில் சமபங்கக் கோலத்தில் நான்கு கைகளுடன் எழுந்தருளியுள்ள இச்சிற்பத்தின் கீழ் வலது கை அபய முத்திரையுடன் உள்ளது. இடது கை தொடையில் ஊன்றி உள்ளது. மேல் வலது கையில் அட்சமாலை உள்ளது. இடது கையில் கெண்டி என அழைக்கப்படும் அமிர்தகலசம் உள்ளது. மூன்று தலைகள் முன்புறமும் ஒரு தலை பின்புறம் இருப்பதாகவும் காட்டப்பட்டுள்ளது. தலையில் அழகிய கரண்டமகுடம் உள்ளது. கழுத்து, காது, கைகள் என அனைத்து இடங்களிலும் அழகிய ஆபரணங்கள் உள்ளன. இடுப்பு முதல் கணுக்கால் வரை அழகிய ஆடை உள்ளது. முகத்தில் புன்னகை தவழ நிற்கும் இச்சிற்பமும் இரண்டாம் இராஜராஜன் காலத்தியது ஆகும்.

அர்த்தமண்டபத் தேவகோஷ்டச் சிற்பங்கள்

விநாயகர் (படம் 5)

அர்த்தமண்டபத் தெற்குச் சுவர் தேவகோஷ்டத்தில் நின்ற கோலத்தில் 2.2 அடி உயரத்தில் அழகிய விநாயகர் சிற்பம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இச்சிற்பம் திருவாசியுடன் வடிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று திருவாசியுடன் பிற்காலச் சோழர் கோயில்களில் விநாயகர் சிற்பங்கள் இருப்பதை மருவத்தூர், விக்கிரமங்கலம் ஆகிய ஊர்க் கோயில்களில் காணலாம். கைகளில் அங்குசம், பாசம், மோதகம், தந்தம் ஆகிய முத்திரைகள் தாங்கி உள்ள இச்சிற்பம் இரண்டாம் இராஜராஜன் காலத்திய மிக அழகிய சிற்பமாகும்.

துர்க்கை

அர்த்தமண்டப வடக்குத் தேவ்கோஷ்டத்தில் துர்க்கை சிற்பம் வைக்கப்படுவ்து மரபாகும். இக்கோயில் தேவகோஷ்டத்தில் தற்பொழுது துர்க்கையின் வாகனமான எருமைத் தலை மட்டும் உள்ளது. துர்க்கை சிற்பம் காணப்படவில்லை. அதற்கு மாறாக சிறிய அளவில் ஒரு லிங்கோத்பவர் சிற்பம் எருமைத் தலையின் மேல் வைக்கப்பட்டுள்ளது.

அர்த்தமண்டபத் துவாரபாலகர் சிற்பங்கள் (படங்கள் 6, 7)

அர்த்தமண்டபத்தின் வாயிலில் இரு பக்கத்திலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள துவாரபாலகர் சிற்பங்கள் இக்கோயிலில் உள்ள மிகப்பெரிய அழகிய சிற்பங்களாகும். 5 அடி உயரம் கொண்ட இச்சிற்பங்கள் நான்கு கரங்களுடன் உள்ளன. இச்சிற்பங்கள் கதையின் மீது காலை ஊன்றி வீரார்ந்தக் கோலத்தில் விஸ்மய, தாடன, சூசி ஹஸ்தங்கள் காட்டி நிற்கின்றன. விழித்து நோக்கும் கண்களும், கோரைப் பற்களும் உயர்ந்த ஜடாமகுடமும், இடுப்பில் ஆடையும்,

கால்களில் வீரக்கழல்களும் உள்ளன. மார்பில் ஆரம், பதக்கம் ஆகிய உள்ளன. பதக்கத்துடன் இணைந்து முடிச்சுக்களாக அமைந்துள்ள யக்ஞோபவீதம் மிகவும் அழகாக உள்ளது. வயிற்றில் உதரபந்தம் இறுகப்பற்றியுள்ளது. நெற்றியில் பூ வடிவில் அணிகலன் உள்ளது. காதுகளில் மகர, பத்ர குண்டலங்கள் உள்ளன. கை, கால் விரல்களில் அணிகலன்கள் உள்ளன. கோப விழிகளும் வெளியே தெரியும் கோரைப் பற்களும் இருந்தபோதிலும் முகத்தில் சாந்தமும் புன்னகையும் தவழ அமைந்துள்ள இவ்விரண்டு சிற்பங்களும் இரண்டாம் இராஜராஜன் காலத்தில் வடிக்கப்பெற்ற எழிலார்ந்த வார்ப்புக்களாகும்.

பரிவாரசன்னதி சிற்பங்கள்

ஸ்தல விநாயகர், முருகன், சண்டிகேஸ்வரர் ஆகிய மூன்று பரிவாரச் சிற்பங்கள் மட்டும் இக்கோயிலில் உள்ளன. சந்திரன், சூரியன், பைரவர், சப்தமாதர், ஜேஷ்டாதேவி என்னும் பிற பரிவார சிற்பங்கள் இக்கோயிலில் இல்லை.

இவ்வை தவிர உதிரியாக விநாயகர், அதிகாரநந்தி, அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய சிற்பங்கள் இக்கோயில் மண்டபத்தில் உள்ளன.

கணபதி (படம் 8)

வடமேற்கு மூலையில் (பிள்ளையார் மூலை) கிழக்கு நோக்கி விநாயகர் சன்னதி கட்டப்பட்டுள்ளது. இச்சன்னதியின் விமானம் கஜபிருஷ்ட வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அடிபீடம் சதுர வடிவில் அமைந்துள்ளது. இதில் வைக்கப்பெற்றுள்ள 1.7 அடி உயரமுள்ள விநாயகர் சிற்பம் அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களுடன் உள்ளது. மேல் வலது கை அங்குசம், இடது கை பாசம் தாங்கியுள்ளன. கீழ் வலது கை உடைந்துள்ளது. இடது கையில் மோதகம் உள்ளது. கழுத்தில் ஆரம், இடுப்பில் உதரபந்தம் ஆகிய அணிகலன்கள் உள்ளன.

சுப்ரமணியர் (படம் 9)

கருவறையின் பின்புறம் கிழக்கு நோக்கியபடி பரிவாரச் சன்னதிகளில் ஒன்றான சுப்ரமணியர் சன்னதி கட்டப்பெற்றுள்ளது. இதனுள் 3.6 அடி உயரமுடைய சுப்ரமணியரின் அழகிய சிற்பம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆறு முகங்கள் 12 கரங்களுடன் புன்னகைத் தவழும் கோலத்தில் வடிக்கப்பெற்றுள்ள இச்சிற்பம் இரண்டாம் இராஜராஜன் காலத்திய வார்ப்பு ஆகும். சமபங்கக் கோலத்தில் திருவாசியுடன் உள்ள இச்சிற்பத்தின் வலது முன் கை அபயஹஸ்தத்தில் உள்ளது. இடது கரம் தொடையில் ஊன்றி உள்ளது. மேல் நோக்கியவாறு ஆறு கரங்களும், கீழ்நோக்கியவாறு ஆறு கரங்களும் உள்ளன. இவற்றில் சக்திப்படை, வச்சுராயுதம், மணி, வில், வேல், கத்தி, கேடயம் போன்ற பல்வேறு ஆயுதங்கள் உள்ளன. நெற்றியில் கண்ணிமாலையும், தலையில் கரண்டமகுடமும், கழுத்தில் ஆரமும், மார்பில் சன்னவீரமும், இடுப்பில் கீர்த்திமுகப் பட்டையுடன் கூடிய ஆடையும் அலங்கரிக்கின்றன.

சண்டிகேஸ்வரர் (படம் 10)

முதல் பிரகாரத்தின் வடக்குப்பக்கத்தில் அர்த்தமண்டபத்தை ஒட்டி தெற்கு நோக்கியபடி சண்டிகேஸ்வரர் சன்னதி கட்டப் பெற்றுள்ளது. அடி முதல் முடி வரை முழுவதும் கருங்கல்லால் கட்டப்பெற்றுள்ள இச்சன்னதியின் உள்ளே அமர்ந்த கோலத்தில் சண்டிகேஸ்வரர் சிற்பம் உள்ளது. வலது கை மழுவைத் தாங்கியுள்ளது. இடது கை தொடை மேல் வைக்கப்பட்டுள்ளது. இடது காலை அர்த்த பத்மாசனத்தில் மடித்து வைத்து வலது காலை கீழே தொங்கவிட்டுக் கொண்டு இருக்குமாறு வடிக்கப்பெற்றுள்ள இச்சிற்பத்தின் முகம் புன்னகை தவழ மோனதவத்தில் சிவனை தியானித்து ஆழ்ந்துள்ளதை

பிரதிபலிக்குமாறு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஜடாமண்டலம் தலையை அலங்கரிக்கிறது. கழுத்தில் பட்டையான ஆரமும், மார்பில் உபவீதமும், வயிற்றில் உதரபந்தமும், இடுப்பில் ஆடையும் உள்ளன. இச்சிற்பமும் இரண்டாம் இராஜராஜன் காலத்தியதாகும்.

உதிரிச் சிற்பங்கள்

அதிகாரநந்தி (படம் 11)

இக்கோயில் மகாமண்டபத்தின் நுழைவாயில் இடப்பக்கம் சிறிய மேடை அமைத்து அதில் அதிகாரநந்தியும், விநாயகர் சிற்பமும் வைக்கப்பெற்றுள்ளன. 1.5 அடி உயரமுடைய அதிகாரநந்தியின் சிற்பம் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் வடிக்கப்பெற்றுள்ளது. . பின் இரண்டு கரங்களில் மழுவும், மானும், கீழ் இரண்டு கரங்கள் அஞ்சலி ஹஸ்தத்திலும் உள்ளன. கூப்பி வணங்கும் கைகளுக்குப் பின்னால் தோளில் சாத்தியபடி கத்தி உள்ளது. தலையில் ஜடாமகுடம் உள்ளது. கழுத்தில் ஆரங்களும், கை, கால்களில் அணிகலன்களும் உள்ளன.

தேவார மூவர் (படம் 12)

மகாமண்டபத்தின் தென்புறம் மேடை அமைத்து வடக்கு நோக்கியபடி அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரின் சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. இவை மூன்றும் இரண்டாம் இராஜராஜசோழன் காலத்துச் சிற்பங்களாகும்.

நந்தி (படம் 13)

முதல் பிரகாரத்துக்கு வெளியே இராஜகோபுரத்தைத் தாண்டி நந்தி மண்டபம், பலிபீடம் ஆகியவை அமைந்துள்ளன. இக்கோயிலில் கொடி மரம் (துவஜஸ்தம்பம்) இல்லை. 1.9 அடி உயரத்தில் அழகாக உயிருள்ள காளைமாடு படுத்திருப்பது போல உயிரோட்டத்துடன்

பளபளப்பான கல்லில் வடிக்கப்பட்டுள்ள நந்தியின் சிற்பம் மிக அழகான சோழர் கால சிற்பமாகும்.

அமிர்தாம்பிகை அம்மன் (படம் 14)

இக்கோயில் வளாகத்தில் மகாமண்டபத்துடன் இணைத்து தெற்கு நோக்கியபடி அமிர்தாம்பிகை சன்னதி கட்டப்பெற்றுள்ளது. கருவறையின் உள்ளே 2.6 அடி உயரத்தில் சமபங்கக் கோலத்தில் அம்மன் சிற்பம் பட்ம பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. தலையில் அழகிய கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. இரண்டு காதுகளிலும் பத்ர, மகர குண்டலங்கள் தொங்குகின்றன. கழுத்தில் அழகிய தாலி செதுக்கப்பட்டுள்ளது. கழுட்தில் ஆரங்கள், தோளில் அணிமணிகள், மேல் கையில் பாகுவலையம், மார்பில் அழகிய பூநூல் இடுப்பில் இருந்து கணுக்கால் வரை தொங்கும் அழகிய ஆடை, கால்களில் சதங்கை போன்ற அணிமணிகளும் கைகளில் வளையல்களும் உள்ளன. மேல் வலது கையில் அட்சமாலை வட்ட வடிவத்தில் உள்ளது. இடது கையில் நீலோற்பலமலர் அல்லது தாமரை காட்டப்பட்டுள்ளது. முன் வலக்கை அபய ஹஸ்தத்தில் உள்ளது. இடது கை தொடையில் ஊன்றி உள்ளது. முகத்தில் சாந்தமும், புன்னகையும் தவழ எழில் மிக்கக் கோலத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டுள்ள இவ்வம்மன் சிற்பம் பிற்காலச் சோழர் காலச் சிறந்த சிற்பமாகும். அமிர்தாம்பிகை என்னும் பெயர் இக்கோயில் உள்ள கல்வெட்டுகளில் இல்லை. இருப்பினும் பிற்காலச் சோழர் காலத்தில் அம்மனுக்கு என தனிச் சன்னதி எழுப்பும் வழக்கம் முதலாம் குலோத்துங்கசோழன் காலத்திலிருந்து வழக்கத்தில் இருந்துள்ளது. இத்தகைய அம்மன் திருக்காமக்கோட்ட நாச்சியார், திருக்காமக்கோட்டத்து எம்பெருமாட்டியார் என்னும் பெயர்களில் கல்வெட்டுகளில் குறிப்பிடப் பெறுகிறது.

செப்புத் திருமேனிகள்

இக்கோயிலில் அழகிய செப்புத் திருமேனிகள் உள்ளன. நடராஜர், சிவகாமியம்மன், சோமாஸ்கந்தர் (சிவனும் உமையும் அமர்ந்த கோலத்தில்), சண்டிகேஸ்வரர், விநாயகர், திருஞானசம்பந்தர் ஆகிய செப்புத் திருமேனிகள் உள்ளன. இவை பிற்காலச் சோழர் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாய் உள்ள திருமேனிகளாகும்.

இயல் - 5

கல்வெட்டுகள் தரும் செய்திகள்

இக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. அவை

1. இரண்டாம் இராஜாராஜன் – கி.பி.1166
2. மூன்றாம் குலோத்துங்கன் – கி.பி.1216
3. மூன்றாம் இராஜராஜன் – கி.பி.1251
4. விஜயநகர மன்னர் இரண்டாம் தேவராயர் – கி.பி.1429

ஆகிய நான்கு மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்டுள்ளன. இவை கி.பி.1166 முதல் கி.பி.1429 வரை இக்கோயிலுக்கு விற்கப்பட்ட நிலங்கள், கொடுக்கப்பட்ட கொடைகள் மற்றும் இப்பகுதியில் ஏற்பட்ட வலங்கை இடங்கை சாதிப்பிரிவினரின் அரசு வரி விதிப்புக்கு எதிரானக் கிளர்ச்சி பற்றிய செய்திகளைத் தருகின்றன.

கல்வெட்டுகளில் இவ்வூர்ப்பெயர் தீயனூரான மனுகுலகேசரிநல்லூர் என்றும் கோயில்பெயர் திருவக்கீஸ்வரமுடையார், திருவக்னீஸ்வரமுடையார் என்றும் குறிப்பிடப்படுகிறது. இவ்வூர் கடாரங்கொண்ட சோழவளநாட்டு மதுராந்தகவளநாடு மற்றும் விக்கிரமசோழவளநாட்டு கடாரங்கொண்டசோழவளநாடு என்னும் வளநாடு மற்றும் நாட்டுப் பிரிவுகளின் கீழ் இருந்துள்ளது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் வாசகமும் அவை தருகின்ற செய்திகளும் கீழே விவரிக்கப் பெற்றுள்ளது.

வரிசை எண் : 1

இடம் : உடையவர்தீயனூர் ஜமதக்னீஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்குச்சுவர்

மன்னன் : இரண்டாம் இராஜராஜன்–1146–1166

ஆட்சியாண்டு : 20

காலம் : கி.பி. 1166

க.ஆ.அ. எண் : – – –

குறிப்பு : இந்நூலாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டு; 17.12.1982 அன்று படிக்கப்பட்டது. இவ்வூர்க் கோயில் கல்வெட்டு ஆய்வு கள ஆய்வில் உதவிய அரியலூர் சப் கலக்டர் திரு.மு.கலைவாணன், வரலாற்றுப் பேராசிரியர் சே.பாண்டியன், தினமலர் நிருபர் சிவசைலம்பிள்ளை, இக்கோயில் அர்ச்சகர் திரு.ஆர்.சந்திரமெள்லி குருக்கள் ஆகியோருக்கு நன்றி. இக்கோயில் கல்வெட்டுக்கள் பற்றி தினமலரில் (18.12.1982) **'சோழ மண்டலத்தின் வரலாறு ஆலயங்களில் இருக்கும் கல்வெட்டு தரும் அரிய தகவல்கள்'** என்ற தலைப்பில் செய்திக் கட்டுரை இந்நூலாசிரியரால் வெளியிடப்பட்டுள்ளது.

செய்தி : இக்கல்வெட்டு இரண்டாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்தியுடன் எழுதப்பட்டுள்ளது. கல்வெட்டு இவ்வூர்ப் பெயரை தீயனூரரான மனுகுலகேசரி நல்லூர் என்றும் கோயில் இறைவன் பெயரை திருவக்கீஸ்வரமுடையார் என்றும் குறிப்பிடுகிறது. இக்கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு இவ்வூரில் காணிஉடைய பலர் சேர்ந்து தங்களுக்குரிய நிலத்தை **'ஊர்க்கீழ் இறையிலியாக'** விற்றுள்ளனர். அவர்கள் விற்ற நிலத்தின் எல்லைகளாக சோழகேரள வாய்க்கால், சுத்தவல்லிவதி, இராஜேந்திரசோழப்பேராறு ஆகியவை

குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வூரின் தெற்கில் ஓடுகின்ற மருதாறு அக்காலத்தில் இராஜேந்திரசோழப் பேராறு என அழைக்கப்பட்டுள்ளது. மனுகுலகேசரி என்பது முதலாம் இர்ராஜேந்திரசோழனின் இரண்டாவது மகனான சோழகேரளன் என்பவரின் இயற்பெயர் ஆகும். இதிலிருந்து இவர்பெயரால் இவ்வூர் அழைக்கப்பட்டது என்பது புலனாகிறது. சிவன்கோயில் உள்ள பகுதி உடையவர்தீயனூர் எனவும், பெருமாள்கோயில் இருந்த பகுதி பெருமாள் தீயனூர் எனவும் அழைக்கப்படுகிறது. திருவக்கீஸ்வரர் (திருவக்னீஸ்வரர்) என்னும் கோயிலின் பெயர் தற்பொழுது ஜமதக்னீஸ்வரர் என அழைக்கப்படுகிறது.

Remarks : The record mentions a sale of land by several individuals who had kani rights in the village Tiyanur alias Manukulakesari nallur, to the temple of Tiruvakkisvaramudaiyar koyil as *urkil iraiyili*. The record also mentions Rajendrachola peraru as a boundary of the land sold by them. The Marudaiyaru river which now flows south of the village seem to have been called as Rajendra chola peraru. Manukulakesari was a name of Cholakeralan who was the second son of Rajendra I and Tiyanur was called in the name of this Prince.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் ஜயமாதும் புவிமாதும் நா
2. மருவிய கலைமாதும் புகழ்மாதுந் நயந்து புல்க அருமறை நெறி அனைத்து
3. ந்தழைப்ப வருமுறை உரிமையில் மணிமுடி சூடித் திங்கள் வெண்கு

4. டைத் திசைக் களிறெட்டுந் தங்கு தனிக் கூடந்தானென விளங்கக் கருங்கலி

5. படிமிசைச் செங்கோல் துரப்ப பொருகதிராழி புவிவளத்துடன் வர வில்

6. லவரிரட்டர் மீனவர் சிங்களர் பல்லவர் முதலிய பார்த்திவர் பணிய எண்ணருங்கற்பில் ம

7. ண்ணகம் புணர்ந்து செம்பொன் வீரஸிங்ஹாஸனத்துப் புவனமுழுதுடையாளொடும் வீற்றிரு

8. ந்தருளிய திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு

9. 19–வதின் எதிராமாண்டு மனுகுலகேசரி நல்லூரில் உடையார் திருவக்கீஸ்வரமுடையார்

10. . . . .

11. திருவாலந்துறையுடையானான வரகுணராயனும் . . . . . த்த தேவனும் (பொன்)

12. னம்பலக் கூத்தனும் தத்தை நல்லூருடையானும் து . . . . ந தேவனும் . . . . .

13. யனும் திருநா . . . . பெருமாளும் நாயக கு . . . . . .

14. குலமுடையான் அரையன் திருவாதவூரளியும் திருவ . . . .

15. நுடையானும் தத்தைநல்லூருடையான் பெரியான்

16. . . . . முடைய தேவனும் திருவேகம்பமுடையானும்

17. . . . .

18. பெரியானும் தத்தை நல்லூருடையான

19. ம்பன் பெரியானும் உய்யவந்தானும் நச்சிநாற்கிநியானும் இவ்வனை

20. வோம் தன்ம தானமாகக் காணியும் ஊர்க்கீழ் இறையிலியுமாக குடுட்த

21. இறையிலியும் . . . . . முதல் உடல் கொண்டு பூசை செலுத்தாமை
22. யில் இவ்வூரில் எங்களுக்குப் பொதுவாய் உடைகுளப்பட்டு இறந்
23. து கிடந்த குளமாய் விளைநிலமாகத் திருத்திப் பயிர்ச் செய்து காணி
24. யும் இறையிலியுமாக அனுபவிக்க கடவதாக விட்ட நாலாங்கண்ணாற் . . . .
25. . . . .
26. யாண்டு ௨ கிளிமங்கலமுடையான் நாய(னா)ர் உய்யவ
27. ந்தான . . . . க்கற சாத்தனூர் திருமணக்கன் ஆ . . . . ாதன் ஆதி
28. த்த தேவன் பேரில் அன்னியநாமத்து விலை கொண்டு இத்
29. தேவர்க்கு திருநாமத்துக் காணியாக திரிவிட்டு பிரமாண
30. . . . .
31. ழ நல்லூருக்கு மேற்கு சோழகேரள வாய்க்காலுக்கு வடக்கு சுத்
32. தவல்லி வதிக்கு கிழக்கு இராஜேந்திர சோழப் பேராற்று
33. க்குத் தெற்கு நடுவுப்பட்ட ௨ வஉ ச வகுஉ இக்குழி . . . .

குறிப்பு : கல்வெட்டின் மீதிப் பகுதி முழுவதும் சிதைந்து விட்டது.

வரிசை எண் : 2

இடம் : மகா மண்டபத் தெற்குச்சுவர்

மன்னன் : மூன்றாம் குலோத்துங்கன் – 1178–1218

ஆட்சியாண்டு : 38

காலம் : கி.பி. 1216

க.ஆ.அ. எண் : 530 of 1993-94

குறிப்பு : புதிய கல்வெட்டு; இக்கல்வெட்டின் ஆட்சியாண்டை 3 எனக் கல்வெட்டிலாக்கா அறிஞர் படித்துள்ளனர்.

செய்தி : கிடாரங்கொண்டசோழவளநாடு என்னும் நாட்டுப்பிரிவின் கீழ் இருந்த தீயனூரான மனுகுலகேசரிநல்லூரில் காணிஉடைய தத்தைநல்லூர் உடையான் கண்ணன் பெரியான் என்பவர் இவ்வூர் திருவக்னீஸ்வரமுடையார் கோயிலில் திருவிளக்கு எரிப்பதற்குத் தன்னுடைய நிலத்தை திருநாமத்துக்காணியாகக் கொடுத்துள்ளார். கல்வெட்டு பல இடங்களில் சிதைந்துள்ளது.

Remarks : The record refers to a gift of land by kannan periyan of Tattainallur (the modern Tattanur), who had kani rights in manukulakesari nallur, as tirunamattukani to maintain a lamp in the Tiruvagnisvaramudaiyar temple at Tiyanur alias Manukulakesari nallur in Kidarankonda cholavalanadu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன வீரதேவற்கு
2. யாண்டு 38 ஸ்வஸ்திஸ்ரீ கிடாரங் கொண்ட சோழவள (நாட்டு தீயனூரான)
3. மனுகுலகேசரி நல்லூர் காணி உடைய த (த்தை நல்லூர்)
4. உடையான் கண்ணன் பெரியானேன் இவ்வூர் உடையார் **(திருவக்கீஸ்வரமு)**
5. **டையார்க்குத் திருநாமத்துக் காணியாக** இக்கோயில் ஆதி
6. சண்டேஸ்வர தேவர் ஸ்ரீஹஸ்தட்து நீர்வாத்துப் பிரமாணம் பண்ணி
7. குடுத்த நிலமாவது இவ்வூரிற் கீழ் கண்டத்து ஆறாங்
8. (கண்ணாற்று **தீர்) த்தக் குளம்** என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு எங்கள்
9. .... .நிலத்துக் கூறிட்ட .....
10. ட்ட வொரு கூற்றால் ஒட்டி விளைநிலங்குழி ள சி .... கு

11. ழி நூற்றுபத்தாறே சின்னமும் இந்நாயனார் கோயில் ஆதி சண்டேஸ்

12. வர தேவர் ஸ்ரீஹஸத்தத்து நீர்வார்த்து பிரமாணம் பண்ணி குடுத்தேன் தத்தை நல்

13. லூருடையான் கண்ணன் பெரியானேன் இ .....

14. கன் **திருவிளக்கு** ..... துக் குடுத்து இரு ....

15. ...... அனுபவித்து வருகிற இவ்வூர் நத்தத்து கீழைத்தெரு ......

16. றகில் நிலமனை கோல் கறா .....

வரிசை எண் : **3**

இடம் : மகாமண்டப வடக்குச்சுவர்

மன்னன் : மூன்றாம் இராஜராஜன் 1216–1257

ஆட்சியாண்டு : 35

காலம் : கி.பி. 1251

க.ஆ.அ. எண் : – – –

குறிப்பு : புதிய கல்வெட்டு

செய்தி : விக்கிரமசோழவளநாட்டுக் கிடாரங்கொண்ட சோழவளநாட்டு தீயனூரான மனுகுலகேசரிநல்லூர் திருவக்கீச்சுரமுடையார் கோயிலை நிருவகிக்கும் தேவகன்மிகள் இக்கோயிலுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தைத் திருத்திப்பயிர் செய்வதற்கு ஏற்பாடு செய்தது பற்றிக் கூறுகிறது.

Remarks : The record refers to the steps taken by the temple officials (devakanmis) to the reclamation of temple land. Tiyanur alias Manukulakesari nallur existed in the nadu division of

Kidarankondachola valanadu, a subdivision of Vikramacholavalanadu.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் றா(ஜ)றா (ஜ) தேவற்கு
2. யாண்டு 34வதின் எதிராமாண்டு மிதுன நாயற்று பூறுவ
3. பக்ஷத்து உ
4. ரோஸனி நாள் விக்கிரம சோழ வளநாட்டு கிடாரங் கொண்ட சோ
5. ழ வளநாட்டு தீயனூரான மனுகுலகேசரி நல்லூர் உடை
6. யார் திருவக்கீச்சுரமுடையார் கோயில் ஆதிசண்டேசுர
7. தேவகன்மிகளோம் இவ்வா . . . . .
8. முன்னாளில் . . . . . .
9. . . . . கண்ட . . . ஆறாஞ் சதிரத்துக் கொண்டான் குளமெ
10. ன்று பேர்க் கூவப்பட்ட நிலம் ஒன்றரையே யரைக்காலும்
11. இந்நாள் வரை . . . . . நிலையாய் திருத்திப் பயிர் செய்யாதே கிடந்தமையில் . . . காலே ஊர் கீழ் நிலம் மாவரைய்
12. இக்குளம் திருட்திப் பயிர் செய்யில் இக்குளத்தா . . . . நிலங்கள் . . .
13. டப் பயிற் செய்ய . . . . இது திருத்திப் பயிர் செ
14. ய்கை (யாலும்) . . . கையாலும் திருத்திப் பயிர் செய் . . . .

15. ...... இந்நாயனாற்கு திருநாமத்துக் காணியாய் இக்குளத்தாலு ....

16. ந்துவருகிற நிலமாய் ....

17. 21 .... (கல்வெட்டு பல இடங்களில் சிதைந்துள்ளது)

வரிசை எண் : 4

இடம் : விநாயகர் சன்னதி மேற்கு, தெற்குச்சுவர்கள்

மன்னன் : விஜயநகர மன்னர் இரண்டாம் தேவராயர் 1422–1444

ஆட்சியாண்டு : சகம் : 1351

காலம் : கி.பி. 1429

குறிப்பு : புதிய கல்வெட்டு; இல.தியாகராஜன், புதிய கல்வெட்டுகளும் புதிய செய்திகளும், ஆவணம் இதழ்–2, ஏப்ரல், 1992, பக்கம் 31–32.

செய்தி : தீயனூரான மனுகுலகேசரிநல்லூர் உடையார் திருவக்னீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில் திருக்கட்டளையில் விக்கிரமசோழ வளநாட்டுக் கிடாரங்கொண்ட சோழவளநாட்டு கட்டளைநாட்டுப் பகுதியைச் சேர்ந்த வலங்கை 98 சாதியினரும், இடங்கை 98 சாதியினரும் ஒன்று சேர்ந்து கூட்டம் கூடி ஒருமித்து தீர்மானம் செய்து இக்கல்வெட்டை வெட்டியுள்ளனர். அரசு அதிகாரிகள் இப்பகுதியில் பூர்வகாலத்தில் இருந்து நடந்து வரும் சிக்கரசர் பட்டயப்படி வரி விதிப்பு முறைகளை பின்பற்றாமல் பிற வரிகளை விதித்து மக்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தியதனால் இச்சாதியினர் வாழ்ந்த நாடு நலங்கி பிற மண்டலங்களுக்கு குடி ஓடிப்போய்விட்டார்கள். எனவே இம்மண்டலத்தில் வழக்கத்தில் இல்லாத வரிகளை விதிக்கக்கூடாது

எனவும் கோபிநாதன்கால் என அழைக்கப்படும் 24 அடி நாட்டளவு கோலால் அளந்து குடிகள் பயிர் செய்த நிலங்களுக்கு சிக்கரசர் பட்டயப்படி வரி செலுத்த வேண்டும் எனவும் தீர்மானம் செய்தனர். இது தவிர வேறு வரி கொடுக்க மாட்டோம் எனவும் முடிவு செய்தனர். இந்த தீர்மானத்தைப் பின்பற்றாமல் மீறி நடந்து வரிவிதிப்புக்கு இடங்கொடுப்பவர்களை மேல்படக் குத்தி கீழ்பட இழுத்துப்போடுவோம் எனவும் தீர்மானித்துள்ளனர். வழக்கத்தில் இல்லாத வரிகளையும் அதிக வரியையும் விதித்து வலங்கை, இடங்கை சாதியினரை நெருக்கத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளாக்கிய விஜயநகர உசாவடிப் பிரதானிகள், ஜீவிதக்காரர்கள், காணி உரிமையுடைய பிராமணர்கள், வெள்ளாளர்கள், வன்னியர்கள் ஆகியோர்க்கு எதிராக கிளர்ந்து எழுந்து ஒன்று சேர்ந்து தீர்மானங்களை இயற்றியதை ஆடுதுறை, கீழப்பழுவூர், அசூர், விருத்தாசலம், பெண்ணாடம், கொருக்கை, ஜெயங்கொண்டம், கோவிந்தபுத்தூர், திட்டக்குடி, எலவாநாசூர், திருப்பனந்தாள் போன்ற இடங்களில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது.

Remarks : The inscription records a solidarity pact of the Valangai and Idangai caste people against the heavy oppressive levy of taxes on them by the Vijayanagar governors, land holding Brahmanas, Vellalas and Vanniyas and decided not to pay such taxes and themselves fixed the tax amount payable by them to the government. They also decided to punish those who violate the decision of the community. Such solidarity pacts of the left hand and right hand people are engraved in the temples at Aduturai, Kilapaluvur, Jayankondam, Govindaputtur, Asur, Tittakudi,

Pennadam, Viruddachalam, Elavanasur, Tiruppanandal and Korukkai.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. மன்மஹாமண்டலீ
3. ஸ்வரந் ஹரிஹர
4. ராயவிபாடந் பா
5. ஷைக்கும் தப்பும
6. ராயர் கண்டந் மூ
7. வராயர் கண்டன்
8. பச்சிம தக்ஷிண
9. உத்தர ஸமுத்ரா
10. திபன் கண்டநாடு கொண்டு
11. கொண்ட நாடு கொடாதா
12. ன் திருபுவநவீரதேவ
13. ராஜ மஹாராயர் ப்ருதி
14. விராஜ்யம் பண்ணி
15. அருளாநின்ற ஸஹா
16. ப்தம் 1351– மேல் செல்லா நின்ற
17. ஸவுமிய ஸம்வத்ஸரத்து
18. தநுநாயற்று
19. அபர பக்ஷ
20. த்து ஸப்திமியும்
21. வெள்ளிக்கிழமை
22. யும் பெற்ற உத்திர
23. த்து நாள் வடகரை
24. விக்ரம சோழ வள
25. நாட்டுக் கிடாரங்
26. கொண்ட சோழவளநா
27. ட்டுக் கட்டளை நாட்
28. டு தீயனூரான மனு
29. குலகேசரி நல்லூர்
30. உடையார் திருவக்
31. னீஸ்வர முடைய்
32. நாயனார் திருக்கோயி
33. ல் திருக்கட்டளை
34. யில் இன்னாட்டு வ
35. லங்கை தொண்
36. ணூற்றெட்டும் இட
37. ங்கை தொண்ணூற்றெட்டும் கூட்ட
38. ம் நிறைவற நிறைந்து
39. குறைவறக் கூடி ஒரு
40. மித்துக் கல்லுவெ
41. ட்டினபடி இன்னாத்

42. டுக்குப் பூறுவம் அற்ற ம
43. ரி ஆதி சிக்கரசர் பட்டை
44. யப்படி ஒழிந்து சீவிதம்
45. உடையவர்கள் நெருக்
46. கம் பண்ணி பிறவரி
47. யாலே நாடு நல
48. ங்கி பிறம
49. மண்டலங்குடியா
50. கி ஒடிப்போகையில்
51. மண்டலம் அற்ற மரி
52. யாதி கோபிநாதன் கா
53. லால் இருபத்துநாலு
54. அடியும் விலக்கடியு
55. ம் கோலால் நாட்ட
56. ளவு கோலால் அளந்து
57. குடி பயிர் பாத்து
58. ப் பூண்ட நி
59. லத்துக்கு சிக்கரசர்
60. பட்டையப்படி
61. யால் உள்ள மரியா
62. திப்படியே இறு
63. க்கக் கடவோம் ஆகவு
64. ம் இம்மரியாதி
65. ஒழிந்து சீவிதங்
66. களை ஒ
67. ழிட்து புறவ
68. ரி குடுக்கக் கட
69. வோம் அல்ல
70. வாகவும் நம்
71. மில் ஒவ்வாமல் புற
72. வரிக்கு இடங்குடு
73. த்தார் உண்டாகி
74. ல் மேற்படக் குத்தி
75. கீழ்பட இழுக்கக்
76. கடவது ஆக
77. வும்.

உடையவர் தீயனூர் பற்றிக் கூறும்

கங்கைகொண்ட சோழபுரம் கல்வெட்டு

வரிசை எண் : 5

இடம் : கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் கருவறை வடக்கு, மேற்கு, விருத்த குமுதப் பகுதி

மன்னன் : வீரராஜேந்திரன் 1063–1070

ஆட்சியாண்டு : 5

காலம் : கி.பி. 1068

குறிப்பு : கல்வெட்டு ஆண்டு அறிக்கை எண் : 82 of 1892; தென்னிந்திய கல்வெட்டுக்கள் மடலம் 4, எண் : 529.

கல்வெட்டு தரும் செய்தி

இக்கல்வெட்டு முதலாம் இராஜேந்திர சோழனின் மூன்றாவது மகனான வீரராஜேந்திரனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி.1068–இல் எழுதப்பட்டதாகும். இக்கல்வெட்டில் இம்மன்னர் தனது தந்தையான முதலாம் இராஜேந்திர சோழர் கி.பி.1035, 1036 ஆகிய ஆண்டுகளில் இக்கோயிலுக்குத் தேவதானமாக வழங்கிய ஊர்களைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிடுகின்றார். அதேபோல இவருடைய அண்ணனான முதலாம் இராஜாதிராஜன் இக்கோயிலுக்கு கி.பி.1044, 1048 ஆகிய ஆண்டுகளில் மடப்புறமாக வழங்கிய ஊர்களைப் பற்றிய விவரங்களையும் பதிவு செய்துள்ளார். அவ்வகையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்த மடத்தில் நாள்தோறும் உணவு வழங்கிட கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றிலும் இருந்த ஏழு ஊர்களை மடப்புறமாக அவர் கொடுத்துள்ளார். அவ்வாறு கொடுக்கப்பட்ட ஏழு ஊர்களில் மனுகுலகேசரி நல்லூர் என்ற ஊரும் இவ்வூருக்கருகில் உள்ள விக்கிரமசோழபுரம் (இன்றைய விக்கிரமங்கலம்) ஆகிய ஊர்களும் அடங்கும். அந்த ஏழு ஊர்களின் முழுப் பெயர்கள் பின்வருமாறு.

1. பவித்திரமாணிக்க நல்லூர், – – –

2. உலகளந்த சோழநல்லூர், (இன்றைய உல்லியக்குடி?)

3. கேரளாந்தக நல்லூர், (இன்றைய கொலையனூர்?)

4. மண்ணைகொண்ட சோழநல்லூர், (இன்றைய மணகெதி?)

5. மனுகுலகேசரி நல்லூர், **(இன்றைய உடையவர் தீயனூர்)**

6. இருமடிச் சோழ நல்லூர், – – –

7. நகரம் விக்கிரம சோழபுரம் **(இன்றைய விக்கிரமங்கலம்)**

இந்த ஏழு ஊர்களும் கங்கைகொண்டசோழபுரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் தீயனூரும், விக்கிரமங்கலமும் கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறியப்படும் ஊர்களாக உள்ளன. மீதி உள்ள ஐந்து ஊர்கள் எவை என கண்டறிய கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கவில்லை. இருப்பினும் ஊர்ப்பெயரின் மருவிய வடிவங்களாக இவை இருக்கக்கூடும் என்ற ஊகத்தின் அடிப்படையில் அடைப்புக்குறிக்குள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த ஊர்கள் கி.பி.1044, 1048 ஆகிய ஆண்டுகளில் முதலாம் இராஜாதிராஜனால் கங்கைகொண்டசோழபுரத்தில் உள்ள மடத்துக்கு இறையிலியாக அம்மன்னரால் கொடுக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை இராஜாதிராஜனின் தம்பி வீரராஜேந்திரன் கி.பி.1068–இல் தான் எழுதிய கல்வெட்டில் தெரிவித்துள்ளார். தீயனூர் பற்றிக் கிடைக்கும் மிகப் பழமையான கல்வெட்டு இதுவே ஆகும்.

கல்வெட்டு :

1. உ ஸ்வஸ்திஸ்ரீ உ திருவளர் திரு. . . . . யந்தன்

2. . . . கங்கைகொண்டசோழ

3. புரத்து உடையார் கங்கைகொண்ட சோழீஸ்வரமுடையார்க்கு தேவதாநமாக பூர்வதேஸமுங் கங்கையுங் கடாரமுங் கொண்டருளிந ஐய்யற்கு யாண்டு ...... ரையர் எழுதிநாலும் திருமந்திரவோலை நாயகம் வழ .....

யாண்டு ஐஞ்சாவது நாள் இருநூற்று எழுபதிநால் வீரமே துணையாகவும் தியாகமே அணியாகவுஞ் செங்கோ

லோச்சிக் கருங்கலி கடிந்து கூடல் சங்கமத் தாஹவல்லனை அஞ்சுவித்து விக்கலநையுஞ் சிங்களநையும் ....மற்றவ .. ..ரோடு வஸ்துவாஹநம் கைக்கொண்டு இரண்டாம் விசையிலுங் குறித்த களத்து ஆகவமல்லனை அஞ்சுவிட்டு வேங்கைநாடு மீட்டுக் கொண்டு தந்நுடந் பிறந்த முந்நவர் விரதமுடித்து வீரஸிங்ஹாஸனத்து உலகமுழுது

டையாளோடும் விற்றிருந்தருளின **கோவிராஜ கேசரிபன்மரான உடையார் வீரராஜேந்த்ர தேவர் காஞ்சிபுரத்து கோயிலினுள்ளால் திருமஞ்சன சாலை தானஞ்செய்தருளாவிருந்து ....**

ழாய் வருகின்றபடி **பூர்வதேசமுங் கங்கை ....**ஐய்யற்கு **யாண்டு இருபத்துநாலாவது** ....குடுத்தமையில் ...... அளந்தபடி ....

ருமாவிநால் நெல்லு தொள்ளாயிரத்து நாற்பத்து ......புடவை உட படக் **கங்கைகொண்ட சோழபுரத்து**

உடையார் கங்கைகொண்டசோழ ஈஸ்வரமுடையார்க்கு பூர்வதேசமுங் கங்கையும் கடாரமுங் கொண்டருளின

ஐய்யற்கு யாண்டு இருபத்து நாலாவது முதல் இறுப்பதாக தேவதானப்ரஹ்மதேயம் இறையிலியாக வரியிலிட

த் திருவாய் மொழிந்தருளிநாரென்று திருமந்திரவோலை. . . . . மூவேந்தவேளான் கல்லியாணபுரமும் கொல்லாபுரமுங் கொண்டருளி ஆனைமேல் துஞ்சியருளின அண்ணர்க்கு யாண்டு

இருபத்தாருவது முதல் பற்றேற்றிந நெல்லு நாநூற்றுக்கலமும் கல்லியாண புரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளி ஆனைமேல்த் துஞ்சிந அண்ணர்க்கு யாண்டு இருபத்தாருவது முதல் இத்தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு கல்லியாணபுரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளி ஆனைமேல்த் துஞ்சித் அண்ணர்க்கு இருபத்தாருவதுமுத லிறுப்பதாக வரியிலிடத் திருவாய் மொழிந்தருள . . . . திரவோலை ராஜேந்த்ரப் ப

ல்லவரையந் எழுத்திநாலும் திருமத்திரவோலை நாயகம் வாண. . . . . . யும் கோவிராஜகேஸரி பந்மராந உடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவர்க்கு . . . . . . .யில்த் தாநம் பண்ணி எழுந்தருளாநிந்று உடையார் கங்கைகொண்ட

சோழஈஸ்வரமுடையார் கோயிலைச் சூழ விட்ட ஊர்களுக்கு . . . . . . .கல்லியாணபுரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளிந ஆனைமேல்த் துஞ்சின அண்ணர்க்கு யாண்டு முப்பதாவது கடாரங்கொண்ட சோழ வளநாட்டு மதுராந்தகவளநாட்டு பவித்திர மாணிக்க நல்லூரும் இந்நாட்டு உலகளந்த சோழநல்லூரும் இந்நாட்டுக் கேரளாந்தக நல்லூரும் இந்நாட்டு

மண்ணைகொண்டசோழநல்லூரும் இந்நாட்டு மநுகுலகேசரிநல்லூரும் இந்நாட்டு இருமடிசோ

ழநல்லூரும் இந்நாட்டு நகரம் விக்கிரம சோழபுரமும் மடங் ...... ந்று வேறு அது போதவில்லை யெந்று மடங்களில் உண்ண.......த நிவந்தக்காரரோடு ......கணக்கில் எழுதி......எந்று வீரராஜேந்த்ர ப்ராஹ்மாதிராஜந் நமக்குச் சொந்நமையில் இவ்வூர்கள் மடப்புறமாகவருகிந்றபடி கல்லியாணபுரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளி ஆறுவம்

.......ருவது முதல் பாசந் முதல் .... இந்நாட்டு . ..... விக்கிரம ...... லூரும் இந்நாட்டு உலகளந்த சோழநல்லூரும் இந்நாட்டுக் கேரளாந்தகல்லூரும் இந்நாட்டு மண்ணைகொண்டசோழநல்லூரும் இந்நாட்டு மநுகுலகேசரிநல்லூரும் இந்நாட்டு இருமடி சோழநல்லூரும் வே

........படி கல்லியாணபுரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளி ஆனைமேல் துஞ்சின அண்ணர்க்கு யாண்டு முப்பதாவது பசான முதல் தவிர்ந்து இவ்வூர்களும் இந்நாட்டு நகரம் விக்கிரசோழபுரமும் ஆக இவ்வூர்களில் இந்நாட்டுப் பவித்திரமணிக்கலநல்லூர் அளந்தபடி நிலம் ஐம்பத்திரண்டே முக்காலே அரைமா

இயல் - 6

பூஜை, வழிபாடு, நிருவாகம், திருப்பணிகள்

இக்கோயில் தற்பொழுது இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் நான்காம் நிலை செயல்அலுவலரின் நிருவாகப் பொறுப்பின் கீழ் இருந்து வருகிறது. விக்கிரமங்கலம்சோழீஸ்வரர் கோயில் நிருவாக மேற்பார்வையில் இருக்கும் இக்கோயிலுக்கு ஒரு கால பூஜை மட்டும் நடத்தப்படுகிறது. இதுதவிர விஷேச நாட்களில் சிறப்பு வழிபாடுகளும் நடத்தப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன் சுவாமி புறப்பாடு, பங்குனி உற்சவம் போன்ற பெரிய திருவிழாக்கள் நடந்துள்ளன. பங்குனி உத்திர திருவிழா உல்லியக்குடி மக்களாலும், திருவாதிரை பூஜை வழிபாடுகள் பட்டாட்டாங்குறிச்சி மக்களாலும், கார்த்திகை சோமவாரங்கள் தீயனூரைச் சேர்ந்த கலிபத்தான், கல்லகத்தான், கிளியூரான், குண்டுலாண்டி போன்ற வகையறாக்காரர்களாலும், ஐந்தாவது வார பூஜை கோயில் குருக்களாலும் செய்யப்பட்டு வந்தது. இக்கோயிலுக்கு பட்டாட்டாங்குறிச்சி, உல்லியக்குடி, உடையவர் தீயனூர், அம்பலவர் கட்டளை போன்ற இடங்களில் தேவஸ்தான நிலங்கள் உள்ளன. தீயனூரில் மட்டும் 60 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் உள்ளன. இந்நிலங்களின் வருவாயைக் கொண்டு பூஜை வழிபாடுகள் நடத்தப்படுகிறது. இக்கோயிலில் ஒரு ரிஷபவாகனம், மூஞ்சுறுவாகனம் மட்டும் உள்ளது.

வரலாற்றுச் சிறப்புடைய ஜமதக்னீஸ்வரர் கோயிலை 22.5.1968–ஆம் ஆண்டு (கீலக வருஷம் வைகாசி மாதம் 9–ஆம் நாள்) இவ்வூர் மக்கள் ஒன்று சேர்ந்து திருப்பணி செய்து கும்பாபிஷேகம்

நடத்தியுள்ளனர். அப்போது எம்.ஜெகன்நாதன் என்பவர் நிர்வாக தர்மகர்த்தாவாக இருந்துள்ளார். தர்மகர்த்தாக்களாக எம்.பிச்சைமுத்துப் படையாச்சி, எம்.ராமசாமிபடையாச்சி ஆகியோர் இருந்துள்ளனர். அறநிலையத் துறை உதவிஆணையராக ஒ.ஆறுமுகம் மற்றும் இன்ஸ்பெக்டராக எஸ்.கண்ணன் அவர்களும் இருந்து இப்பணியை நடத்தி உள்ளனர்.

42 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்யும் முயற்சியில் ஊர் மக்கள் ஈடுபட்டுள்ளனர். அதன் முதல் பணியாக 04.03.2010 அன்று பாலாலயம் செய்யும் பணி நடைபெறுகிறது. இப்பணியில் ஊர்மக்களும் ஆன்மிக அன்பர்களும் அறநிலையத் துறையும் ஈடுபட்டுள்ளனர். இப்பாலாலய விழாவை சிவாகமசெல்வர் சிவஸ்ரீ ந.க.அய்யப்ப சிவாச்சாரியார், மெலட்டூர் அவர்கள் நடத்தி வைக்கவும், வேலூர் மாவட்டம் திருவலம் சர்வமங்களாபீடம் ஸ்ரீசாந்தாசுவாமிகள், கோமல் ஓம் நமச்சிவாயா டிரஸ்த் திருப்பணிச் செம்மல் கோமல்சேகர், கும்பகோணம் ஜோதிமலை இறைபணிக்கூடம் நிறுவனர் தபத்திரு திருவடிக்குடில் சுவாமிகள் மற்றும் கொல்லிமலைச் சித்தர் திரு.பகவான் சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை நடத்தவும் இசைந்துள்ளனர். இப்பணி சிறப்புடன் நிறைவேறி குடமுழுக்கு நடந்திட எல்லாம் வல்ல அமிர்தாம்பிகை உடனுறை ஜமதக்னீஸ்வரர் நல்லருள் புரிய வேண்டும் என்று பிரார்த்திப்போமாக. இத்திருப்பணியில் இப்பகுதி மக்கள் அனைவரும் பங்கேற்று இறைவன் அருள் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட இருகரம் கூப்பி அழைக்கின்றோம்.

– ஸ்ரீ ஜமதக்னீஸ்வரர் ஆலயத் திருப்பணிக் குழுவினர்.

இயல் - 7

உடையவர் தீயனூரைச் சுற்றியுள்ள ஊர்களின் சிறப்பு

1. நாகமங்கலம்

வி.கைகாட்டி–ஸ்ரீபுரந்தான் சாலையில் அமைந்துள்ள முதல் ஊர் நாகமங்கலம் ஆகும். இங்கு பழமையான நாகநாதசுவாமிகோயில் உள்ளது. அம்பேரி என அழைக்கப்படும் பெரிய ஏரியும் இவ்வூரில் உள்ளது. இவ்வேரியின் கீழ் உள்ள வினாயகர்கோயில் சுவரில் உள்ள கல்வெட்டு இந்த ஏரியின் பெயரை அம்பிகாபதி ஏரி என்றும் இக்கோயிலை பிறவாவரம் தரும் பிள்ளையார்கோயில் என்றும் குறிப்பிடுகிறது. கல்வெட்டு

1. பிறவா வரந்தரும் மா மாலயந் தே
2. டும் மாலுக்கெட்டா யிறவாத முத்தியே (நெ)
3. ளி தாக நல்கு மிருநெதியா மறிவானந்த
4. மளிக்கு மம்பிகாபதியின் கரை கீழ் யி
5. றவா நெறி காட்டின பிள்ளையார் ப
6. தம் பெணிந்தே.

அம்பிகாபதி ஏரி என்ற பெயர் கம்பரின் மகன் அம்பிகாபதியை நினைவூட்டுகிறது. செட்டித்திருக்கோணம் இரணேஸ்வரர் கோயிலில் எழுதப்பெற்றுள்ள முதலாம்இராஜாதிராஜசோழனின் 35–ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி.1053) இவ்வூர்ப் பெயரை வானவன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்றும் இச்சதுர்வேதிமங்கலத்தின் மேற்குப்பிடாகையாக திருக்குன்றம் (திருக்கோணம்) ஊர்

அமைந்துள்ளது என்றும் குறிப்பிடுகிறது. (இந்நூலாசிரியரால் 4.5.1986–இல் கண்டறிந்து படிக்கப்பட்ட புதிய கல்வெட்டுகள், 'ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜகேசரி பந்மற்க்கு யாண்டு 35–வது வடகரை ப்ரஹ்மதேயம் ஸ்ரீ வாநவந் மஹாதேவிச் சதுர்வேதிமங்கலத்து பெருங்குறி பெருமக்களோம் எங்களூர் மேல்பிடாகைத் திருக்குன்றத்து இரணசிங்க ஈஸ்வரமுடைய மஹாதேவற்க்கு இவ்வூர் நடுவில் திருமுற்றத்து இருன்து ஸபையோம் விற்று விலையாவணம் செய்து குடுத்த நிலமாவது திருநாராயணப் பேரேரி கீழ்க்கரைக்கு கிழக்கும் தென்பாற்க்கெல்லை திருக்குன்றத்து ஊர்க்குளத்துக்கு வடக்கும் கீழ்ப்பாற்க்கெல்லை ஐவர் குளமும் அடியார் குளமுர்பட . . . . ., ஆவணம் இதழ்–16, ஜுலை 2005, பக்.44–45)

வானவன்மாதேவி என்பது முதலாம் இராஜேந்திரசோழனின் பட்டத்தரசியின் பெயராகும். இப்பெயரில் இம்மன்னரால் பிராமணர்கள் வாழ்கின்ற பிரம்மதேய ஊராக இவ்வூர் அமைக்கப்பட்டது என்பது இக்கல்வெட்டிலிருந்து தெரியவருகிறது. காலப்போக்கில் இப்பெயர் மறைந்து தற்பொழுது நாகமங்கலம் என அழைக்கப்படுகிறது. மங்கலம் என்ற சொல் பிராமணர்கள் வாழ்கின்ற குடியிருப்புக்கு பின்னொட்டுப் பெயராக அமையும் சொல் ஆகும்.

2. செட்டித்திருக்கோணம், பெரியதிருக்கோணம்

இவ்விரண்டு ஊர்களும் சோழர்காலத்தில் திருக்குன்றம் என்ற பெயருடன் அழைக்கப்பட்டது. விஜயநகர தெலுங்கு மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் குன்றம் என்ற பெயர் மறைந்து கோணம் என ஆகிவிட்டது. முதலாம் இராஜேந்திரசோழன் ஆட்சிக் காலத்தில் இவ்வூருக்கு இம்மன்னரின் பெயரால் மதுராந்தபுரம் என்னும் பெயர் சூட்டப்பட்டது. இவ்வூர் மிகப்பெரிய வணிக நகரமாக திகழ்ந்தது

என்பதை இந்த இரண்டு ஊர்களிலும் உள்ள சோழர், பாண்டியர், கிருஷ்ணதேவராயர் காலக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. செட்டியார்கள் வாழ்ந்தபகுதி செட்டித்திருக்கோணம் எனவும், பிற மக்கள் வாழ்ந்த பகுதி பெரியதிருக்கோணம் என இரண்டு பகுதிகளாக இவ்வூர் பிரிந்துவிட்டது. செட்டித்திருக்கோணத்தில் உள்ள சிவன்கோயில் இரணசிங்க ஈஸ்வரம் எனவும் பெரியதிருக்கோணத்தில் உள்ள சிவன்கோயில் மதுராந்தக ஈஸ்வரம் எனவும் அங்குள்ள பெருமாள்கோயில் இராஜேந்திரசோழ விண்ணகர் எனவும் சோழர் காலத்தில் அழைக்கப்பட்டது. இவ்வூரில் புத்த, சமண சமயங்களைப் பின்பற்றிய வணிகர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை இங்குள்ள புத்த, சமண சிற்பங்கள் உணர்த்துகின்றன. (இல.தியாகராஜன், திருக்கோணம் கல்வெட்டுகள், ஆவணம் இதழ்–1, 1991, பக்.15–25, ஆவணம் இதழ்–16, பக்.44–47, இல.தியாகராஜன், மறைந்துபோன வணிகநகரம் மதுராந்தகபுரம், கல்வெட்டு காலாண்டு இதழ், 37, 1991, பக்.12–24)

3. அம்பலவர்கட்டளை

தீயனூர் செல்லும் வழியில் அமைந்துள்ள இவ்வூர் உத்தமசோழன், முதலாம்இராஜராஜன் ஆகியோரிடம் அமைச்சராகப் பணியாற்றிய பெருந்தரத்து அதிகாரி குவளாலமுடையான் அம்பலவன் பழுவூர் நக்கனான விக்கிரமசோழமாராயன் என்பவருடைய பெயரால் உருவான ஊராகும். இவர் இன்றைய கர்நாடக மாநிலத்து கோலாரில் பிறந்தவர் ஆவார். இவ்வதிகாரி கோவிந்தப்புத்தூர் சிவன்கோயிலைக் கருங்கல்லால் கி.பி.980–இல் கட்டித் திருப்பணி செய்துள்ளார் என்று அங்குள்ள கோயில் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. (SII Vol.XIX, No.272, 314, 332, 333, 334, 358, 357)

அம்பலவர்கட்டளை என்ற பெயர் இவரால் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட ஊர் என்ற பொருளில் ஏற்பட்டது எனலாம்.

4. சிறுகடம்பூர்

விக்கிரமங்கலத்தின் தெற்கில் இவ்வூர் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் பெருங்கடம்பூர் என இவ்வூர் அழைக்கப்படுகிறது. புதூர் முனியங்குறிச்சி என்ற ஊரில் உள்ள ஜோதீஸ்வரர் சிவன்கோயிலில் எழுதப்பட்டுள்ள வீரராஜேந்திரனின் 3–ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி.1065), "வடகரை இராஜேந்திரசிங்கவளநாட்டு உத்துங்கதுங்க வளநாட்டு குன்றக்கூற்றத்து பெருங்கடம்பூர்" என்று இவ்வூர்ப் பெயரைக் குறிப்பிடுகின்றது. பொன்பரப்பி அருகே கடம்பூர் எனும் ஊர் உள்ளது. அவ்வூர்ப் பெயரிலிருந்து வேறுபடுத்திக்காட்ட இவ்வூருக்கு சிறுகடம்பூர் என்ற பெயர் ஏற்பட்டது என்று கருதலாம். (இல.தியாகராஜன், அரியலூர் அருகே சோழர்காலக் கல்வெட்டு கண்டெடுப்பு, தினமலர், திருச்சி, 18.06.2008, தினமணி, 17.06.2008)

5. அம்பாப்பூர்

புதூர் முனியங்குறிச்சி ஜோதீஸ்வரர் கோயிலில் எழுதப்பட்டுள்ள முதலாம்இராஜேந்திரனின் 13–ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி.1025) இவ்வூர்ப் பெயரை சூரியக்குடி என்றும் கோயில் பெயரை சூரியக்குடிமகாதேவர் என்றும் கூறுகிறது. மேலும் இவ்வூர் மேல்கார்ரைக்காட்டு **ஐம்பாப்பூர்கூற்றம்** என்னும் நாட்டுப்பிரிவின் கீழ் இருந்தது என்றும் கூறுகிறது. சூரியக்குடி என்ற ஊர்ப்பெயர் காலப்போக்கில் மறைந்து புத்தூர் என ஆகிவிட்டது. சூரியக்குடி மகாதேவர் என்ற பெயரும் மருவி தற்பொழுது ஜோதீஸ்வரர் கோயில் என அழைக்கப்படுகிறது. ஐம்பாப்பூர் என்னும் ஊர்ப்பெயர் தற்பொழுது

அம்பாப்பூர் என அழைக்கப்படுகிறது. இவ்வூரே விக்கிரமங்கலம் உள்ளிட்ட கிராமங்களுக்கு வருவாய்த்துறை தலைமைக் கிராமமாக திகழ்கிறது. சோழர் காலத்தில் இவ்வூர் ஐம்பாப்பூர் கூற்றம் என்னும் நாட்டுப்பிரிவின் தலைமைக் கிராமமாகத் திகழ்ந்துள்ளது. (இல.தியாகராஜன், அரியலூர் அருகே சோழர்காலக் கல்வெட்டு கண்டெடுப்பு, தினமலர், திருச்சி, 18.06.2008, தினமணி, 17.06.2008)

6. ஆலவாய்

விக்கிரமங்கலத்தின் வடக்குப்பகுதியாகத் திகழும் இவ்வூர் ஆலைவாய் என்ற பெயரோடு பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த இடமாகத்திகழ்ந்தது.. ஆலை என்பது பல்வேறு கருவிகளும், ஆயுதங்களும், காசுகளும் உற்பத்தி செய்யப்பட்ட இடத்தைக் குறிப்பிடுகிறது என்று இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இங்கு சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் 40அடி உயரத்திற்கு மிகப்பெரிய மேடு உள்ளது. இதில் மேற்பரப்பிலும் மற்றும் எங்கு தோண்டினாலும் ஏராளமான இரும்பு உருக்கு சிட்டைகள் மற்றும் உலோகங்கள் உருக்கப் பயன்படும் மண்குழாய்களும் நிரம்பிக் கிடப்பதைக் காணலாம். இவ்வூரில் உள்ள சொக்கநாதர் கோயிலில் பிற்காலச்சோழர் கல்வெட்டு உள்ளது.

7. விக்கிரமங்கலம்

இவ்வூரின் தொன்மையான பெயர் விக்கிரமசோழபுரம் என்பதாகும். முதலாம்இராஜேந்திரனுக்கு விக்கிரமசோழன் என்னும் பட்டப்பெயர் இருப்பதை இவருடைய ஏசாலம்செப்பேடு (கி.பி.1036) குறிப்பிடுகிறது. இப்பெயரில் உருவாக்கப்பட்ட வணிகநகரம் விக்கிரமசோழபுரம் ஆகும். இப்பெயரை முதன்முதலில் கங்கைகொண்டசோழபுரத்தில் எழுதப்பட்டுள்ள இவருடைய மகன்

முதலாம்இராஜாதிராஜனின் கல்வெட்டு (கி.பி.1048) குறிப்பிடுகிறது. (ARE 82 of 1892, SII Vol.IV, No.529) இம்மன்னர் கங்கைகொண்டசோழபுரத்தில் இருந்த மடத்தில் நாள்தோறும் சோறு வழங்கிட ஏழு ஊர்களை மடப்புற இறையிலியாக கொடுத்துள்ளார். அவ்வூர்களில் ஒன்றாக நகரம் விக்கிரமசோழபுரமும் குறிப்பிடப்படுகிறது. விக்கிரமங்கலம் சோழீஸ்வரர்கோயிலில் எழுதப்பட்டுள்ள மூன்றாம்குலோத்துங்கனின் கல்வெட்டு (கி.பி.1201) இவ்வூர்ப் பெயரை நகரம் விக்கிரமசோழபுரம் என்றே குறிப்பிடுகிறது. (ARE 178 of 1956-57, இல.தியாகராஜன், பெரம்பலூர் மாவட்டத்தில் வணிக நகரங்கள் பராமரித்த குளங்கள், ஆவணம் இதழ்–16, ஜூலை 2005, பக்.41) இதிலிருந்து முதலாம்இராஜேந்திரசோழனால் உருவாக்கப்பட்டது இவ்வூர் என்பது புலனாகிறது. இவ்வூரில் சோழமன்னர்கள் வந்து தங்கும் அரண்மனைகள் இருந்தது என்பதை கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. (SII Vol.V, No.458, ARE 261 of 1924, 118 of 1927-28, 271 of 1915, 246 of 1901, 247 of 1901, 198 of 1923) இவ்வூரில் ஏராளமான சோழர், பாண்டியர், விஜயநகர, நாயக்கர்கால செப்புக்காசுகள் கிடைக்கின்றன. இவற்றை இவ்வூர் ஆசிரியர் ஆர்.ஜெயபால் சேகரித்து வைத்துள்ளார். ஆனால் பலரும் இவ்வூர்ப் பெயரைக் கேட்டவுடன் தவறுதலாக இது விக்கிரமசோழனால் (1118–1135) உருவாக்கப்பட்ட ஊர் என்று கூறிவிடுகின்றனர். விக்கிரமசோழனுக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே இவ்வூர் உருவாக்கப்பட்டது என்பதை கல்வெட்டுகள் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

இவ்வாறு உடையவர்தீயனூரைச் சுற்றிலும் வரலாற்றுச் சிறப்புடைய பல ஊர்கள் அமைந்துள்ளன.



கோயில் தென்புறத் தோற்றம்




கோயில் - வடமேற்குத் தோற்றம்



விநாயகர்



அதிகாரநந்தி



நந்தி



சோழர் கால கல்வெட்டுகள்





அக்னி தீர்த்தம்



சோழர் கல்வெட்டு - தீயனூரான
மநுகுலகேசரிநல்லூர்



பலிபீடம்





இராஜகோபுரம்



2-தட்சணாமூர்த்தி


3-விஷ்ணு





4-




விநாயகர்

5-அர்த்தமண்டப தெற்கு தேவகோஷ்டம்

6,7 -துவாரபாலகர் சிற்பங்கள்











8- கணபதி



9-சுப்பிரமணியர்



10 - சண்டிகேஸ்வரர்



11-அதிகாரநந்தி


12–அப்பர்


சுந்தரர்



திருஞானசம்மந்தர்



13 -நந்தி



விநாயகர்



14 - அமிர்தாம்பிகை





திருஞானசம்மந்தர்

நடராஜர்





சண்டிகேஸ்வரர் சன்னதி



விநாயகர் சன்னதி (கஜபிருஷ்ட விமானம்)



சண்டிகேஸ்வரர் சன்னதி



முன் மண்டபம் , மடப்பள்ளி



சிவகாமசுந்தரி - ஆடவல்லார்



சோமாஸ்கந்தர்



கோயில் முகப்புத் தோற்றம்

Mercury Printers, Perambalur. Cell : 94437 65979